பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 13 வியாழக்கிழமை 27.06.2024 கதிர் 232

## ஜப்பான் செல்கிறார் அமைச்சர் அலி சப்ரி

அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி ஜூலை மாதம் முதலாம் திகதி உத்தியோகபூர்வ பயணமாகஜப்பான் செல்கிறார்.

ஜப்பானிய அயலுற வுத்துறை அமைச்சர் யோகோ கமிகாவா விடுத்த அழைப்பின் பேரில் இந்தப் பயணம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அலி சப்ரி ஜப்பானிய பிரதியமைச்சருடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட உள்ளார். ஜப்பானின் தலைமை அமைச்சரவை செயலாளர் யோஷிமாசா ஹயாஷிஉட்பட பல முக்கியஸ்தர்களையும்சந்திக்கவுள்ளார்.

அமைச்சருடன், அயலுறவுத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகளும் செல்லவுள்ளனர்.

## அதிபர் ஆசிரியர் போராட்டம் மீது பொலிஸார் சரமாரியான தாக்கு

### கண்ணீர்ப் புகைக் குண்டு தாக்குதல், நீர்த்தாரை பிரயோகம்




கொழும்பு, கோட்டே தொடருந்து நிலையம் முன்பாக நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் மீது பொலிஸார்கண்ணீர்புகைக் குண்டுத் தாக்குதல் மற்றும் நீர் தாரைத் தாக்குதலை நடத்தினர். இதனால்அங்கும் பதற்ற நிலை ஏற்பட்டது.

தீவிர தாக்குதல்கள் மூலம் போராட்டக்காரர்களை அங்கிருந்து பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

சம்பள ☞ 8

## இது ரகசியம் அல்ல!

பொதுத் தேர்தலுக்கு இன்னும் 100 நாட்களே உள்ளன. ஏனென்று கேட்கிறீர்களா, ஜனாதிபதித் தேர்தலை எப்படியும் பிற்போடமுடியாது என்கிற நிலமை வலுத்து வருவதால், யார் ஜனாதிபதியாக ஆட்சிக்கு வந்தாலும் நாடாளுமன்றம் கலைக்கப்படுவது உறுதி. எனவே நாடாளுமன்றத் தேர்தல்இன்னும்மூன்றுமாதங்களில் உறுதி.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் நாடாளுமன்றத்தைக்கலைத்துவிட்டு அடுத்த24மணித்தியாலங்களுக்குள் பொதுத் தேர்தலை நடத்துவோம் என ஏறக்குறைய அனைத்து முக்கிய வேட்பாளர்களும் தற்போது கூறியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்ப்பினரகளுக்கும் இப்போது இதுபற்றிய கவலலதான். தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலரும் அடுத்த தேர்தலில்பதவியை இழக்க நேரிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதிலும் மொட்டுக் கட்சி ☞ 2

## குழப்பம்

அனைத்து அரச பாடசாலைகளின்கல்விச்செயற்பாடுகளும் நாளை வழமை போன்று இடம் பெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளதால் குழப்பம் ஏற்பட்டுள்ளது. நேற்று கொழும்பில் நடைபெற்ற அதிபர், ஆசிரியர்கள் போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட நீர்த்தாரைத் தாக்குதலைக் கண்டித்து இன்றும் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்த நிலையில் ஆளும் தரப்பின் அறிவிப்பால் இந்தக் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

எனினும் ஆசிரியர்கள் தமது போராட்டத்தில் உறுதியாக இருக்கும் காரணத்தால் பாடசாலைகளில் இன்றைய தினம் கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறாது என்று ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்தன.

## சரியான தீர்வு வழங்கிய என்னுடனா இருட்டிலே தடவும் குழுக்களுடனா?

### யாருடன் மக்களின் பயணம் எனத் தீர்மானியுங்கள் என்கிறார் ஜனாதிபதி

ஆரம்பத்திலிருந்தே பிரச்சினையைப்புரிந்துகொண்டுநடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்கிய என்னுடன் இணைந்து நாட்டை முன்னேற்றுவீர்களா? அல்லது இன்னும் பிரச்சினையை புரிந்து கொள்ளாமல், இருட்டில் தடவிக் கொண்டு, அதிகாரத்தைப் பெற முயற்சிக்கும் குழுக்களுடன் பயணிக்கவிரும்புகிறீர்களா?உங்கள் முடிவு ரணில் விக்ரமசிங்கவின் எதிர்காலத்தை தீர்மானிக்காது. நாட்டின்எதிர்காலத்தையும்உங்கள் எதிர்காலத்தையும்மட்டுமன்றி ☞ 2

## பொதுநலவாய அமைப்பு பிரதிநிதியுடன் முன்னணியின் செயலாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள பொதுநலவாய அமைப்பின் தென் ஆசியபகுதிக்குப்பொறுப்பதிகாரியான லெசி கிரேக் அம்மையார் மற்றும் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர்ஆகியோருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

நேற்று மாலை 7.00 - 9.00 மணி வரை யாழ் நகரிலுள்ள ஜெற்விங் விடுதியில் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினரால் பின்வரும் விடயங்கள்பேசப்பட்டன என்றுதெரிவிக்கப்பட்டது.

கடந்த 75 வருடங்களாக இலங்கை அரசு கடைபிடித்துவரும் கொள்கைகளும், தீர்க்கப்படாமல்நீண்டுசெல்லும் இனப்பிரச்சினையுமே இலங்கையின் இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குப் பிரதான காரணங்களாகும். இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதாரத்தை ஒருபோதும்கட்டியெழுப்ப முடியாது.

இலங்கையில்இனப் பிரசினைக்கான அடிப்படை காரணியாக அமைந்தது இலங்கையிலிருக் கும்'ஒற்றையாட்சி' அரசியல்அமைப்பாகும். சிறிலங்கா அரசமைப்பில் 13ஆம் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுமுற்றுமுழுதாகநடைமுறையில் இருக்கும்போதேதமிழ்த் தேசம்மீதான இலங்கை அரசின் இனவழிப்பு நடைபெற்றிருந்தது.

போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு புரிந்த இனவழிப்புக்குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைபோன்றவற்றிற்கும் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் இனப்பிரச்சினைதீர்க்கப்படாமல் தமிழர் தேசம் மீதான கட்டமைப்புசார் இனவழிப்பும் தீவிரமடைந்து மீண்டும் இனமுரண்பாடுகள் வலுவடைந்து செல்வதற்கும் அடிப்படைக் காரணம் இதே ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பேயாகும்.

13 ஆம் ☞ 8

## பரிஸ் கிளப், எக்ஸிம் வங்கியுடன் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு

### நேற்று எட்டியது இலங்கை

கடன்மறுசீரமைப்புத் தொடர்பான பேச்சுக்கள் நேற்றுபிரான்ஸ்நாட்டின் தலைநகர் பரிஸில் நிறைவுக்குவந்துள்ளன. உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் (பரிஸ் கிளப்) இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று கடன் மறுசீரமைப்புதொடர்பில் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் பீஜிங்கிலும் இலங்கை நேற்று இறுதி இணக்கப்பாட்டை எட்டியதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டது.

இந்த இணக்கப்பாடுகளுடன், இலங்கை தனது முக்கிய உத்தியோகபூர்வ ☞ 8

## அமெரிக்கா வரவேற்பு

கடன்வழங்கும்நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளமையை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

அமெரிக்காவின் இலங்கைக்கானதூதுவர் ஜூலி சங், தமது எக்ஸ் தளத்தில் அதனை வரவேற்றிருப்பதுடன், இந்த ஒப்பந்தமானது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்துக்குப் பெரிதும் உதவும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்இலங்கை தொடர்ந்து ☞ 10

## சட்டமா அதிபரின் பதவி நீடிப்பினை அரசமைப்பு பேரவை மீள நிராகரிப்பு

சட்டமா அதிபர் சஞ்சய்ராஜரத்தினத்தின் பதவிக்காலத்தை மேலும்6மாதங்களுக்கு நீடிப்பதற்கான ஜனாதிபதியின்யோசனையை அரசமைப்பு பேரவை மீண்டும் நிராகரித்துள்ளது.

இதன்படி குறித்த பிரேரணைக்கு எதிராக 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஆதரவாக 3 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர்.

சட்டமா அதிபர் ☞ 8

## ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகிறது ஆணைக்குழு

ஜனாதிபதிதேர்தலுக்கு பயன்படுத்தக்கூடிய அரச அதிகாரிகள் மற்றும் அரச வாகனங்கள் தொடர்பில் கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

அதன்படி எதிர்வரும் தேர்தலுக்கு பயன்படுத்தக்கூடிய அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதில் பங்குபற்றக்கூடிய அதிகாரிகளின் எண்ணிக்கைதொடர்பில் உரிய ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ☞ 10

## இனி இது .....

உறுப்பினர்களுக்கு அது தொடர்பில் கிலியே பிடித்துள்ளது. இதனால் யாரோடு அணி சேர்ந்து அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது என்பதில் அவர்கள் இப்போதே மும்முரமாக உள்ளனர்.

அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு பல்வேறு கூட்டணிகளுடன் கலந்துரையாடி வருவதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக மொட்டுக் கட்சியில் இருந்து போட்டியிட்டுவிட்டு தற்போது நாடாளுமன்றத்தில் சுயேச்சையாகபச உள்ள பெருமளவிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கான பேச்சுக்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர்.

பல சுற்றுப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதாகவும் இன்னும் பல இறுதிக்கட்டத்தில் இருப்பதாகவும் கட்சிக்குநெருக்கமானவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுதவிர மீண்டும் மொட்டுவில் இணைந்து போட்டியிடவும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சு நடத்தி வருகின்றனர். அதேநேரம் சுமார் 30 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று தனித்துவமாக மூன்றாவது அணி ஒன்றை உருவாக்குவதில் முன்னணியில்

சுமார் 30 எம்.பி.க்கள் கொண்ட குழு மூன்றாவது படையை உருவாக்கமுயற்சித்துவருவதாகவும் கூறப்படுகிறது. தெற்கில் மட்டுமல்ல வடக்கிலும் ஜனாதிபதித் தேர்தலைவிட நாடாளுமன்றத் தேர்தலின் மீதே எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல்வாதிகளும் அதிக சிரத்தை எடுத்து வருகின்றனர். எப்படியாவது ஒற்றுமைக் கோசத்தைப் போட்டு கதிரைகளைப்பிடிப்பதில்அவர்களும் மும்முரமாகவேசெயற்படுகினற்னர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சரியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப் போகிறது.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நேற்று மாலை நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதி ஆற்றிய முழுமையான உரை வருமாறு :

நமது நாட்டின் அண்மைய வரலாற்றில் இன்று மிக முக்கியமான நாள். இந்நாள் ஒரு தனித்துவமான மைல்கல்.

கடந்த காலத்தில் நாம் பாடுபட்ட பணிகளுக்கான நல்ல பலன்கள் தற்போது நமது நாட்டுக்குக் கிடைத்துள்ளன.

இன்று முற்பகல் பரிஸ் நகரில் இலங்கையின் உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு குறித்த பேச்சுக்களை நிறைவு செய்து, கடன் வழங்குநர்களுடன் இறுதி இணக்கப்பாட்டை எட்ட முடிந்தது.

அதேபோல் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் இன்று நாம் பீஜிங் நகரில் இறுதி இணக்கப்பாட்டினை எட்டினோம். அதற்கு அமைவான உரிய செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டை உண்மையிலேயே நேசிப்பவர்களுக்கு இது ஒரு நற்செய்தியாகும்.

இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் இவ்வகையான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக நாங்கள் கடுமையாக உழைத்து வந்தோம். விரிவாக பேச்சு நடத்தினோம். கடந்த காலத்தில் நாம் பெற்ற பொருளாதார வெற்றிகள் இருதரப்பு பேச்சுக்களில் எமக்குப் பெரும் பலமாக இருந்தன.

இந்த பேச்சுக்கள் வெற்றியடைய, எமது கடன் வழங்குநர்களான சீனா மற்றும் சீன எக்ஸிம் வங்கி, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவில் இணைத்தலைமை வகிக்கும் இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் அந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்களும், பரிஸ் கழகத்தின் செயலகமும் எமக்கு வழங்கிய ஆதரவுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்ட இலங்கை மற்றும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், எமக்கு ஆலோசனை வழங்கிய லஸார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் .

இந்த ஒப்பந்தங்களின் மூலம், வெளிநாடுகளில் உள்ள அனைத்து இருதரப்பு கடன் தவணைகளையும் 2028 ஆம் ஆண்டுவரை ஒத்திவைக்க முடியும். அதன் பிறகு, சலுகை நிபந்தனைகள் அடிப்படையில் அனைத்து கடன்களையும் செலுத்த 2043 வரை நீண்டகால அவகாசம் கிடைக்கும்.

2023ஆம் ஆண்டில் நாம் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்துள்ளோம். இப்போது வெளிநாடுகளின் இருதரப்புக் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக நிறைவுசெய்ய முடிந்தது. அடுத்ததாக வெளிநாட்டு பிணைமுறி உரிமையாளர்களை உள்ளடக்கிய வணிகக் கடன் வழங்குநர்களுடன் ஒரு உடன்பாட்டை எட்ட வேண்டும். இந்தப் பாதையில் தொடர்ந்து செல்வதன் மூலம், அதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அது தொடர்பான பேச்சுக்களை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறோம்.

இன்று நாம் எட்டியுள்ள இணக்கப்பாடுகளால், நமது பொருளாதாரத்திற்கு சுவாசிக்க அவகாசம் கிடைக்கிறது. 2022ஆம் ஆண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.2 வீதத்தினை, வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்துவதற்குச் செலவிட வேண்டியிருந்தது. 2027 முதல் 2032 வரையான காலத்தில் கடன் செலுத்துவதற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதத்திற்கும் இற்கும் குறைவான தொகையையே ஒதுக்க வேண்டியிருக்கும்.

2022 இல் ஆளும்தரப்பின் வருடாந்த நிதித் தேவை, மொத்த தேசிய உற்பத்தியில் 34.6 சத வீதமாகும். இந்த இணக்கப்பாடுகள் காரணமாக 2027 முதல் 2032 வரையான காலப்பகுதியில் அந்த நிதித் தேவை 13 சதவீதத்தை விடக் குறையும்.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், இலங்கை கடன் செலுத்த முடியாத நாடு என்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அந்த அறிவிப்பைத் தொடர்ந்து உலக நாடுகள் எங்களுடனான கொடுக்கல் வாங்கல்களை நிறுத்திவிட்டன. வங்குரோத்து அடைந்த நாட்டுடன் நிதி உறவுகளைப் பேணுவதற்கு எந்தவொரு நாடும் முன்வராது, கடன்களை வழங்காது. குறைந்தபட்சம் கடன் பத்திரங்களைக்கூட ஏற்றுக்கொள்ளாது.

இந்தப் பின்னணியில் வெளிநாட்டுக்கடன் உதவியோடு நம் நாட்டில் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. அந்த நாடுகள், தங்கள் திட்ட அலுவலகங்களை மூடிவிட்டு தத்தமது நாடுகளுக்குச் சென்றன. அபிவிருத்திப் பணிகள் முற்றிலும் முடங்கின.

இப்போது கடன் மறுசீரமைப்புப் பணியின் முக்கியமான கட்டட' வெற்றிகரமாக முடித்துள்ளதால், வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி முன்னெடுத்த அனைத்துத் திட்டங்களையும் மீண்டும் தொடங்க அந்தந்த நாடுகளுக்கு சட்டபூர்வ வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தி, இலகு ரயில் பாதை, அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட பல திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். அது மாத்திரமன்றி பல புதிய அபிவிருத்தித் திட்டங்களை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

இருதரப்பு கடன் வழங்குநர்கள் எங்களுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதால், நமது நாட்டின் மீதான சர்வதேச நம்பிக்கை மேலும் அதிகரித்து வருகிறது. இது ஒரு வகையான சர்வதேச அங்கீகாரமாகும். எமது கடன் பத்திரத்தைக்கூட ஏற்றுக்கொள்ளாத சர்வதேச சமூகம் தற்போது எமக்கு நம்பிக்கைச் சான்றிதழை வழங்கும் நிலைக்கு வந்துள்ளது.

எனவே இன்று நாம் இணக்கப்பாட்டிற்கு வந்த இந்த இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். இந்த உடன்படிக்கைகளை பிரதமர், ஜுலை 2ஆம் திகதி நடைபெறும் விசேட நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிப்பார். நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டை நேசிக்கும் அனைத்துத் தரப்பினரையும் அந்த ஒப்பந்தங்களை அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாம் இதுவரை எளிதான பயணத்தை கடந்துவரவில்லை. கடந்த காலங்களில் நாம் மிகக் கடினமான, கஷ்டமான பாதையைக் கடந்து வந்தோம். இந்தப் பணிக்காக நமது அமைச்சர்களும், அதிகாரிகளும் கடுமையாக உழைத்தனர். நமது நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பொறுமையுடன் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். நாங்கள் அனைவரும் வெவ்வேறு சிரமங்களையும், கஷ்டங்களையும் எதிர்கொண்டோம். இன்னமும் எதிர்கொள்கின்றோம்.

இந்த முன்னேற்றத்தை சீர்குலைக்க சிலர் முயன்றனர், இன்னும் முயல்கின்றனர். ஆனால் அவர்களால் இந்தப் பயணத்தை நிறுத்த முடியவில்லை. இவர்கள் எதிர்காலத்தில் ஒருநாள், நாட்டைக் காட்டிக் கொடுத்தமைக்காக, தங்களின் பிள்ளைகளின் முன்னால் வெட்கப்பட நேரிடும்.

பொருளாதாரம் வலுப்பெறும் போதெல்லாம், நாம் சலுகைகளை வழங்கினோம். பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டன. எதிர்காலத்திலும் அந்நிலைமை தொடரும். சரியான பாதையில் பயணித்தால், பொருளாதாரம் வலுப்பெறும்போது, தற்போதைய கஸ்டங்களை படிப்படியாகக் குறைத்துக் கொள்ளலாம். வேலை நிறுத்தங்களாலும், அச்சுறுத்தல்களாலும் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம், எங்களுக்கு தீர்வுகளும், நிவாரணங்களும் கிடைக்கும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டைப் பொறுப்பேற்றபோது, நாங்கள் மிகவும் கடினமான பாதையில் செல்ல வேண்டியிருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்டினேன். இந்தப் பிரச்சினைகளை ஒரு வாரத்தில், இரண்டு, மூன்று, நான்கு மாதங்களில் அல்லது ஒரு வருடத்தில் தீர்க்க முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

'ஹூனுவட்டயே' நாடகத்தை மேற்கோள்காட்டி, அடிவாரம் தெரியாத, பயங்கரமான பாதாளத்தின் மேலாக அமைக்கப்பட்ட தொங்கு பாலத்தை நாம் கடக்க நேரிடும் என்பதை வலியுறுத்தினேன்.

அப்போது நம் நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தில் இருந்தது. அதிலிருந்து நாட்டைக் காப்பாற்ற பலர் முன்வரத் தயங்கினர், பயந்தனர். 'செய்யாத சிகிச்சைக்கு சிறு-தேன் ஔடதம் தேடுவதைப் போல' ஒவ்வொரு காரணங்களைக் கூறி தப்பிக்கொள்ள முயன்றனர். முழு ஆட்சி அதிகாரத்தையும் கொடுத்தால் நாட்டைப் பொறுப்பேற்பதாக ஒரு தரப்பு கூறியது. அமைச்சரவைக்கு தங்களுடைய ஆட்களை நியமிக்க அனுமதித்தால் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக மற்றொரு குழுவினர் தெரிவித்தனர். இன்னும் சிலர் ஜனாதிபதி பதவியை வழங்கினால் ஏற்றுக் கொள்வதாகக் கூறினர்.

ஆனால், எந்த நிபந்தனையும் இல்லாமல் இந்தச் சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். பொருளாதாரப் படுகுழியில் இருந்து நம் நாட்டையும், நம் நாட்டு மக்களையும் காப்பாற்றும் வலிமை எனக்கு இருந்தது. என்னிடம் வேலைத்திட்டம் இருந்தது.

இதுபோன்ற சூழ்நிலைகளில் இருந்து நாடுகள் வெளிவருவதற்கான வழிகளைப் பற்றிய புரிதலும் அனுபவமும் எனக்கு இருந்தது. திட்டமிட்ட கொள்கைகள் மற்றும் அர்ப்பணிப்புடன் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அதற்கான சர்வதேச ஆதரவைப் பெற முடியும் என்பதையும் அறிந்திருந்தேன்.

அவைதான் என்னிடம் இருந்தன. எனக்கென்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கவில்லை. எனக்கென்று ஒரு அமைச்சரவை இருக்கவில்லை. எனக்கென்று ஒரு ஆளும் தரப்பு இருக்கவில்லை. ஆனால் நான் சவாலை ஏற்றுக்கொண்டேன்.

"பெருமைபேசுவதைவிட்டுவிட்டு செயலில் இறங்குவதே ஒரு பணியை ஆரம்பிப்பதற்கான சரியான வழி!" என்று உலகப் புகழ்பெற்ற படைப்பாளி 'வால்ட் டிஸ்னி' சொன்ன கூற்று நினைவுக்கு வந்தது. பயமின்றி செயலில் இறங்கினேன்.

2022 ஆகஸ்ட் 3 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் ஆரம்ப உரையின்போது, வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப பின்பற்ற வேண்டிய நான்கு அம்சக் கொள்கைகளை நான் நாட்டுக்கு முன்வைத்தேன்.

1. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து, விரிவான கடன் வசதிகளைப் பெற்று நாட்டில் நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துவது,

2. சர்வதேச நிதி மற்றும் சட்ட வல்லுனர்களான லஸார்ட் (Ldazard) மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் (Clifford Chance) ஆகியோருடன் இணைந்து கடன் உறுதிப்படுத்தல் திட்டத்தைத் தயாரித்து கடன் வழங்குநர்களுடன் உடன்பாட்டை எட்டுவது,

3. வெளிநாட்டு முதலீட்டை உறுதிப்படுத்திக் கொள்வதோடு, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் கொள்கைகள், சட்ட திட்டங்களை உருவாக்குவதுடன், டிஜிட்டல் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவது,

4. இத்திட்டத்தின் மூலம் 2048 ஆம் ஆண்டுக்குள் கடனற்ற பொருளாதாரத்தை உருவாக்கி அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவது,

ஆகிய நான்கு அம்சக் கொள்கைகளை அன்று முன்வைத்தேன்.

அன்று நான் குறிப்பிட்ட வேலைத்திட்டம் குறித்தும், அதை எப்படிச் செயல்படுத்துவது என்பது பற்றிய அனைத்துத் தகவல்களையும் அவ்வப்போது நாடாளுமன்றத்தில் முன்வைத்தேன். இதை நாங்கள் இரகசியமாகச் செய்யவில்லை. அனைத்தும் வெளிப்படைத் தன்மையுடன் செய்யப்பட்டன.

நான்கு அம்சக் கொள்கைகளில் முதல் மூன்று விடயங்களும் இப்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நமது வேலைத்திட்டமும் நாம் கடந்து வந்த பாதையும் சரியானவை என்பதை இது நிரூபிக்கிறது.

கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் வங்குரோத்து முத்திரை குத்தப்பட்ட நாடு என்ற வகையில், இரண்டே ஆண்டுகளில் இந்த மாதிரியான முன்னேற்றத்தை எட்ட முடிந்ததே பெரும் வெற்றியாகும். இவ்வாறு பொருளாதார படுகுழியில் விழுந்த ஏனைய நாடுகளுக்கு, சாதகமான நிலையை எட்ட நீண்ட காலம் பிடித்தது. அண்மைய வரலாற்றில், உலகில் எந்த நாடும் இவ்வளவு சிறப்பான வெற்றியை இவ்வளவு குறுகிய காலத்தில் பெற்றதில்லை.

நமது பொருளாதாரம் வீழ்ந்துள்ள படுகுழி தொடர்பில் நாம் தெளிவாகப் புரிந்து வைத்திருந்தோம். அதற்குக் கொடுக்கப்பட வேண்டிய சரியான தீர்வுகளை நாங்கள் அறிந்திருந்தோம். எங்களுடைய தொலைநோக்குப் பார்வை, உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு காரணமாக இந்த நிலையை எங்களால் அடைய முடிந்தது. எனவே, இந்த வழியைப் பின்பற்றினால், நான்காவது கட்டமான 2048 இற்குள் அபிவிருத்தியடைந்த நாடாக மாற முடியும் என்பது இப்போது தெளிவாகிறது.

2022 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் அதலபாதாளத்தில் இருந்த ஒரு நாட்டின் தற்போதைய நிலை என்ன?

தொடர்ந்து 6 காலாண்டுகளாக சுருங்கிச்சென்ற நமது பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து வளரத் தொடங்கியது. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் மீண்டு வர வழியின்றி, வற்றிப் போயிருந்த எமது வெளிநாட்டு கையிருப்பு தற்போது 5,500 மில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. ரூபாய் வலுப்பெற்றுள்ளது. வங்கி வட்டி விகிதம் குறைந்துள்ளது.

2022 செப்டம்பரில் 70 சதவீதமாக இருந்த பணவீக்கம் தற்போது 9 சதவீதமாகக் குறைந்துள்ளது. முதன்மைகணக்கு இருப்பை உபரியாக மாற்றக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. அதேபோல், கடந்த ஆண்டு நாட்டின் வெளிநாட்டுக் கணக்குக் கையிருப்பில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. 1977 இற்குப் பின்னர் உபரியை ஏற்படுத்தியது இதுவே முதல் முறையாகும்.

சிறந்த பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்காக நாம் இந்த இலக்குகளை எட்டியிருக்கிறோம். எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். அதனால், நாம் இப்போது மீண்டும் சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெற்றுள்ளோம். அதேநேரம் நாம் இதுவரை கடந்து வந்த பாதை சரியானது என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. சர்வதேச அளவிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் அன்று சமர்ப்பித்தபோது, நாட்டைப் பற்றி சிந்தித்து இந்த வேலைத் திட்டங்களுடன் இணைந்துகொள்ளுமாறு இந்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் அழைப்பு விடுத்தேன். சில அரசியல் கட்சிகள் அந்த அழைப்பை ஏற்று இன்று என்னுடன் இணைந்து இந்தப் பயணத்திற்கு ஆதரவளித்து வருகின்றன. ஆனால் சில அரசியல் கட்சிகள் இன்றும் விமர்சித்து வருகின்றன.

இந்த விமர்சனங்கள் பற்றியும் கூற விரும்புகிறேன்.

கோட்டாபய ஜனாதிபதி பதவியில் இருந்தபோது சர்வதேச நாணய நிதியம் இல்லாமல் தீர்வு கிட்டாது என்று சொன்னவர்கள் இப்போது சர்வதேச நாணய நிதியம் தேவையில்லை என்கின்றனர். மக்கள் கஷ்டப்படும்போது பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் பயனில்லை என்று கூறிய தரப்பினர், அவர்கள் ஆட்சிக்கு வந்தால் பால் தேநீருக்கு பதிலாக வெறும் தேநீரை மட்டும் குடிக்க வேண்டியிருக்கும் என்று கூறுகின்றனர்.

சிலர் பிரசித்தமடைய அரசியல் செய்கின்றனர். இல்லையெனில், பாடசாலை அரசியலை செய்கிறார்கள். அவர்களின் அரசியல்,

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தடைசெய்யப்பட்ட இழுவை வலை தொழிலால் இரணைமடு குள நன்னீர் மீனவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி இரணைமடு குளத்தில் தடை செய்யப்பட்ட இழுவை வலைகளை பயன்படுத்த சிலர் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டு வருகின்றமையால் பெரும்பாலான ஏனைய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கிளிநொச்சி இரணைமடு குளத்தில் சுமார் 50 மீனவர்கள் தடை செய்யப்பட்ட இழுவை வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்காரணமாக ஏனைய மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சங்கத்தின் கட்டுப்பாடுகளை மீறி தடை செய்யப்பட்ட தொழிலில் ஈடுப்பட்டு வருகின்றனர். நீரியியல் வள திணைக்களம் குறித்த தடை செய்யப்பட்ட தொழிலை மேற்கொள்ள வேண்டாம் என அறிவித்தும் அதனையும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ள பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள், தொடர்ந்தும் சிலர் இவ்வாறு தடை செய்யப்பட்ட தொழில் ஈடுப்பட்டால் ஏனைய தொழிலாளர்கள் முற்றுமுழுதாக பாதிக்கப்படுவார்கள் எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இரணைமடு குளத்தை நம்பி 152 குடும்பங்கள் தங்களது வாழ்வாதார தொழிலாக நன்னீர் மீன்பிடி தொழிலை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் குறிப்பிட்டனர்.

எனவே இது தொடர்பில் உரிய திணைக்கள அதிகாரி ஒருவரை தொடர்பு கொண்டு வினவிய போது, இந்த விடயம் தொடர்பில் தனக்கும் தகவல் கிடைத்ததாகவும் எனவே தடை செய்யப்பட்ட தொழிலை மீனவர்கள் மேற்கொள்ளும் இடத்து அவர்கள் கைது செய்யப்பட்டு சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனக் குறிப்பிட்டார்.(05)

# மூதூரில் மதுபானசாலை திறப்புக்கு எதிர்ப்பு தெரிவித்த 13 பேர் கைது



திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருதயபுரம் பகுதியில் மதுபான சாலை திறக்கப்பட்டதையடுத்து அதில் அமைதியின்மையை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் 13 நபர்களை கைது செய்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் 9 ஆண்களும் 4 பெண்களும் அடங்குவர். இதில் 5 ஆண்களை பாதுகாப்பு நிமித்தம் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இக் குறித்த அமைதியின்மை சம்பவத்தில் இருபொலிஸார் மற்றும் பெண் ஒருவரும் காயமடைந்த நிலையில் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# அச்சுவேலியில் வீடுடைத்து தங்க நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், அச்சுவேலி பத்தமேனி பகுதியில் வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்கள் வீட்டை பூட்டி விட்டு வெளியே சென்ற போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டார் வீடு திரும்பிய போதே, வீட்டின் கதவு உடைக்கப்பட்டு நகைகள் திருடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

அந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வீட்டார் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(05)

# யாழ். மாநகர எல்லைக்குள் 3 உணவகங்களுக்குச் சீல்



யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கி வந்த உணவு கையாளும் நிலையங்கள் மூன்றிற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கி வந்த உணவு கையாளும் நிலையங்களில் கடந்த 19ஆம் திகதி பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

அதன்போது, வண்ணார்பண்ணை மற்றும் நல்லூர் பகுதிகளில் இயங்கி வந்த உணவு கையாளும் நிலையங்கள் மூன்று, சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த நிலையில் அவற்றுக்கு எதிராக யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, உணவு கையாளும் நிலையங்களில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை அவற்றை சீல் வைத்து மூடுமாறு மன்று உத்தரவிட்டது.

மன்றில் உத்தரவுக்கு அமைய பொது சுகாதார பரிசோதகர்களால் அவற்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. (05)



# சதுரங்க போட்டியில் அல் அக்ஸா மாணவி ஸபீஹா மாகாண மட்டத்திற்குத் தெரிவு

(எம் சியாஜ்)

புத்தளம் வலய மட்டத்தில் இடம்பெற்ற சதுரங்க போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் தரம் 09 இல் கல்வி கற்கும் மாணவி மொஹமட் சியாஜ் பாத்திமா சபீஹா 15 வயதிற்கு உட்பட்ட பிரிவில் இரண்டாம் இடம்பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரை பாடசாலையின் நிர்வாகக் குழு சார்பாக பிரதி அதிபர் எஸ் எப் சாஜினாஸ் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

கற்பிட்டி பெரிய குடியிருப்பு, வாழைத் தோட்டம் பகுதியில் வசிக்கும் மேற்படி மாணவி எம்.எஸ்.எப் சபீஹா, கற்பிட்டியின் பிரபல ஊடகவியலாளர் எம்.எச்.எம் சியாஜ் மற்றும் ஏ.ஏ.எப் சியானா தம்பதிகளின் இளைய புதல்வியும் வயம்ப பல்கலைக்கழக பொறியியல் தொழில்நுட்ப பிரிவின் மூன்றாம் வருட மாணவன் எம்.எஸ்.எம் சகீர் மற்றும் சாஜித். சிபாக் ஆகியோரின் சகோதரி என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தற்பெருமையும் வசைபாடலும்

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் உருப்படியான எந்தவொரு விடயமும் இருக்கவில்லை. அதில் நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டவன் நனே என்கிற தற்பெருமையும் எதிர்க் கட்சிகள் மீதான வசைபாடலும் அதிகம் இருந்தன. அதனை நீக்கிவிட்டுப் பார்த்தால் அதில் உருப்படியான எந்தவொரு விடயமும் இல்லை.

நாடுவங்குரோத்துநிலையில்இருந்துமீண்டுவிட்டதாக அவர் தனது நேற்றைய உரையில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் அந்த அறிவிப்பை நேரடியாக விடுக்கவில்லை. பதிலாக 'பரிஸ் கிளப்' மற்றும் சீனாவின் எக்ஸிம் வங்கி ஆகியவற்றுடன் கடன்மறுசீரமைப்புத் திட்டத்திற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது என்பதை அறிவித்தார். இதன் மூலம் இனி, தடைப்பட்டிருந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்றார்.

இதுவரையில் தான் நாட்டை அழைத்துச் சென்ற பாதை சரியானது என்றும் அதனாலேயே இந்தளவு விரைவாக பொருளாதார மீட்சியை அடைய முடிந்தது என்றும் இதே போக்கில் சென்றால் 2048க்குள் கடன்கள் அற்ற அபிவிருத்தி அடைந்த தேசமாக இலங்கை மாறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பணியில் தன்னோடு ஒத்துழைக்காமல் தன்னைவசைபாடியஎதிர்க்கட்சியினரைவசைபாடுவதும் அவர்களை மக்கள் நிராகரிக்கவேண்டும் என்று கோருவதுமே அவரது உரையின் பெரும்பகுதியாக அமைந்தது. அதன் அடிப்படையில் ஆரம்பத்திலிருந்தே பிரச்சினையைப் புரிந்துகொண்டு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்கிய என்னுடன் இணைந்து நாட்டை முன்னேற்றுவீர்களா? அல்லது இன்னும் பிரச்சினையை புரிந்து கொள்ளாமல், இருட்டில் தடவிக் கொண்டு, அதிகாரத்தைப் பெற முயற்சிக்கும்குழுக்களுடன்பயணிக்கவிரும்புகிறீர்களா? என்றும் மக்களிடம் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அந்த வகையில் அவர் ஒரு தேர்தல் பரப்புரையையே ஆற்றியிருக்கிறார்.

மக்களின் முடிவு ரணில் விக்ரமசிங்கவின் எதிர்காலத்தை தீர்மானிக்காது, நாட்டின் எதிர்காலத்தையும்உங்கள்எதிர்காலத்தையும்மட்டுமன்றி அது உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப்போகிறது என்று மக்களைப் பயமுறுத்தவும் முயன்றிருக்கிறார்.

அவரது உரையிலேயே கடன் மறுசீரமைப்பு இன்னமும் முழுமையடையவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது. பிணை-–முறிக் கடனாளர்க–ளுடனான பேச்சுக்கள் இன்னமும் தொடர்கின்றன. அவையும்முடிவுக்குவந்துஒருஇணக்கப்பாடுஎட்டப்பட்டால் மமட்டுமே கடன்மறுசீரமைப்பு முழுமையடையும். இந்தக் கடன்மறுசீரமைப்பு மூலம் இலங்கை நிம்மதிப் பெருமூச்சுவிடுவதற்குக் கால அவகாசம் கிடைத்துள்ளதேதவிர, இதுமட்டுமேபொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்திவிடாது.

தேசிய உற்பத்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் ஆளும் தரப்பினர் முன்வைக்கக்கூடிய சிறந்த திட்டங்களே நாட்டைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வைக்கும். அந்த வகையில் கடன்மறுசீரமைப்புக்குப் பின்னர் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படப்போகின்றனே என்கிற தெளிவுபடுத்தலும் அரசுத் தலைவரின் உரையில் இல்லை.

ஒட்டுமொத்தத்தில் அரசுத் தலைவர் தேர்தலுக்கான பரப்புரையை ரணில் நேற்றுத் தொடக்கினார் என்பதற்கப்பால் பெரிதாகச் சொல்லிக் கொள்வதற்கு அந்த உரையில் ஒன்றுமில்லை.



## பார்க்கப் பார்க்கப் பரவசம்!

**வெ. இன்சுவை**

சில ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், திருமண நிகழ்வு நடந்துமுடிந்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளுக்குப் போக நேர்ந்தால், வழக்கமான விசாரிப்புகள் முடிந்தவுடன், தங்கள் இல்லத் திருமண ஆல்பத்தை எடுத்து நம்மிடம் கொடுத்து விடுவார்கள். 'பார்த்துக் கொண்டிருங்கள்' என்று தந்துவிட்டு அவர்கள் தன் வேலையைப் பார்க்கப் போய்விடுவார்கள்.

நாமோ, நமக்குப் பரிச்சயமான முகங்களை மட்டும் பார்த்துவிட்டு, 'நாம் எங்கே இருக்கிறோம்?' என்று தேடுவோம். அந்தப் புகைப்படத்தைப் பார்த்தவுடன் ஆல்பத்தை மூடி வைத்துவிடுவோம். சில சமயம் அவர்கள் நம் அருகே அமர்ந்துகொண்டு ஒவ்வொரு படமாகக் காட்டி 'இது எங்க ஒன்றுவிட்ட அண்ணன்', இது எங்க ஒன்றுவிட்ட பெரியப்பா' என்று விளக்கம் கொடுத்துக் கொண்டே போகும் போது, நமக்கு இலேசாக சலிப்புத் தட்டும்.

நமக்கோ நம் படத்தைப் பார்த்தால் போதும். அது ஒரு சிறிய ஆல்பமாக இருக்கும். முக்கிய நிகழ்வுகளை மட்டுமே படம் பிடித்திருப்பார்கள். அதைப் பார்க்கவே பொறுமை இருக்காது.

அடுத்ததாக, தூக்கவே முடியாத மிக மிக தடிமனான ஆல்பங்களின் வரவு ஆரம்பமாயின. இரண்டு ஆல்பங்கள் போடுவார்கள். வரவேற்பு ஆல்பம் மற்றும் முகூர்த்த ஆல்பம். இரண்டு பெரிய தோல் பை அல்லது பெட்டிகளில் வைத்துக் கொடுப்பார்கள். அதைத் தூக்குவதே சிரமம். தடிமனான அந்த ஆல்பத்தை மடியில் வைத்துக் கொண்டு பார்ப்பதற்குள், 'போதும், போதும்' என்று ஆகிவிடும்.

முன்பு கல்யாணம் என்றால், முதல் நாள் இரவு வரவேற்பு, மறுநாள் காலை முகூர்த்தம்; சில சமயம் காலையில் முகூர்த்தம் மாலை வரவேற்பு இருக்கும். ஃபிலிம் கேமரா கொண்டு புகைப்படம் எடுத்த காலத்தில், சற்றே விலை கூடியதான ஃபிலிம் ரோல் வாங்க வேண்டும் என்பதால் முக்கிய நிகழ்வுகளை மட்டுமேப்படம் எடுத்தார்கள். திருமண வரவேற்பின்போதும் எல்லோரையும் படம்பிடிக்க மாட்டார்கள். யாரைப் படம் எடுக்க வேண்டும் என்பதை புகைப்படக் கலைஞரை அமர்த்திய பெண் வீட்டுக்காரரர் சைகை காட்டுவார்.

மற்றபடி கூட்டத்தில் அழகான பெண்கள், சுட்டிக் குழந்தைகள், விருந்தாளிக் கூட்டம் முழுவதையும் சேர்த்து ஒன்றிரண்டு படங்கள். அவ்வளவே. பின்னர் தாலி கட்டுதல், பொட்டு வைக்கும்போது, மாலை மாற்று, மெட்டி அணிவது, மணப்பந்தலைச் சுற்றி வருவது, தம்பதியின் நெருங்கிய சுற்றங்கள்... மொத்தமே 50 படங்களே இருக்கும்.

விடியோ அறிமுகமானபோது, நிகழ்வை விடியோ எடுத்தார்கள். விடியோவை நினைத்த மாத்திரத்தில் போட்டுப் பார்க்க முடியாது. அதற்கென 'டெக்' என சொல்லப்பட்ட சாதனம் வேண்டும். சிடிக்கு முன்னேறிய காலத்திலும் இப்படித்தான். அதற்கென சிடி பிளேயர் அல்லது கணினி தேவை. இப்போது 'பென்டிரைவில்' சேமித்துக்கொண்டு தொலைக்காட்சிப் பெட்டியில் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் மூன்று மணி நேரம் திருமணத் திரைப்படத்தைப் பார்க்கும் பொறுமை இல்லை. அதுவும் அடிக்கடி போட்டுப் பார்க்க முடியாமல் கிடக்கிறது.

ஆல்பம் என்றால் அது ஒரு நிரந்தரமான ஆவணம். எப்போது வேண்டுமானாலும் எடுத்துப் பார்த்து மகிழலாம் என்கிற நிலை சிறிது சிறிதாக மாறத் தொடங்கியது. டிஜிட்டல் மயமான பின்பு கண் சிமிட்டும் நேரத்தில் ஏராளமான படங்களை எடுத்துத் தள்ளும் வசதிகள் கேமராவில் வந்துவிட்டன.

தற்போது நடத்தப்படும் திருமணங்கள் ஆடம்பரத்தின் உச்சம். செலவை இழுத்துவிட்டுக் கொண்டு, நிறைய கொண்டாட்டங்கள், நிறைய நிகழ்வுகள் நடக்கின்றன. வீட்டோடு செய்ய வேண்டிய சடங்குகளை ஊர் கூட்டிச் செய்கிறார்கள். பந்தல்கால் நடுவது, நலங்கு வைப்பது என்பது போன்ற நிகழ்வுகளிலும் ஆடம்பரம். இன்றைய புதிய நாகரிகம் 'மெஹந்தி நிகழ்ச்சி'. இது ஆடல், பாடல் என அமர்க்களப்படுகிறது. முழு நிகழ்வையும் புகைப்படம், மற்றும் விடியோ எடுக்கிறார்கள்.

திருமண வரவேற்பில் பல புதுமைகளைச் செய்கிறார்கள். விருந்தாளிகள் அனைவரையும் படம் எடுக்கிறார்கள். இரண்டு அல்லது மூன்று புகைப்படக் கலைஞர்கள், விடியோகாரரர்கள் என ஒரு கும்பலே இருக்கிறது. 'ட்ரோன்' பறக்கவிட்டு படம் எடுக்கிறார்கள். மணமக்களை மண்டப வாசலில் இருந்து மணமேடைக்கு அழைத்து வரவேண்டும். அதற்கு ஒரு மலர்ப் பந்தல். அதை நாலைந்து பேர் தூக்கிக் கொள்ள, மணமக்களை அந்தப் பந்தலுக்குள் அழைத்து வருகிறார்கள். அதற்கு எத்தனை 'கிளிக்குகள்'!

திருமணத்தின் தொடக்கத்திலிருந்து, மணப்பெண் புக்ககம் போகும் வரை ஆயிரக்கணக்கான படங்கள். இப்படிப்பட்ட படங்களோடு, ஒத்திகை இல்லா படங்கள்/இயல்பு நிலைப் படங்கள் (கேண்டிட் ஃபோட்டோ) எடுக்கிறார்கள். புகைப்படக் கலைஞர் 'கொஞ்சம் சிரியுங்க, கொஞ்சம் நிமிருங்க, இங்க பாருங்க' என்று சொல்லாமல், நாம் அறியாவண்ணம், நம்மைப் படம்பிடிப்பது. நம் முகம் அஷ்டகோணலாக இருக்கும்போது, நமது ஏதேனும் செய்கையைப் படமெடுத்துவிடுகிறார்கள். மொத்தத்தில் ஒவ்வொரு அசைவும்பதிவாகிறது; ஆவணமாகிறது; எக்குத்தப்பான அசைவுகள் கூட.

இன்னொரு கூத்தும் தற்போது நடந்து கொண்டிருக்கிறது. திருமணத்துக்கு முன்பு, மணமக்கள் (அதவாது மணம் முடிக்கவிருக்கும் இணை) புகைப்படக் கலைஞரோடு அழகான இடங்களுக்குப் போய் ஒரு திரைப்படம் அளவுக்கு காணொலி எடுக்கிறார்கள். பின்னணியில் திரைப்படப் பாடலோடு ஆடுகிறார்கள்; கொஞ்சம் வரம்பு மீறியும் கூட. இதற்கான தனிமை சூழ் இடங்களை புகைப்படக் கலைஞர்கள் தேர்வு செய்து வைத்துள்ளார்கள். ஓடிப்பிடித்து விளையாடுவதிலிருந்து முத்தமிடுவது வரை பல விதங்களில் படம் எடுக்கிறார்கள்.

ஒரு காணொலியைப் பார்த்தேன். ஒரு பெண் பட்டுப் புடவை கட்டிக் கொண்டு, சர்வ அலங்காரம் செய்து கொண்டு, கறுப்புக் கண்ணாடி அணிந்து, ஆண்பிள்ளை வேட்டியை மடித்துக் கொண்டு நிற்பது போல, பட்டுப் புடவையை மடித்துக் கொண்டு நிற்கிறாள். என்னத்தைச் சொல்ல? சினிமாவின் கவர்ச்சியைவிடவும்தூக்கலாகஇவர்கள்நடிக்கிறார்கள். அதை சமூக வலைதளங்களிலும் பதிவிடுகிறார்கள்.

முன்பெல்லாம் திருமணம் முடிந்த ஓரிரு வாரங்களுக்குள் ஆல்பத்தைத் தந்துவிடுவார்கள். ஆனால் இப்போதோ மணம் முடித்து குழந்தை கூட பிறந்துவிடுகிறது. ஆல்பம் ரெடி ஆவதில்லை. காரணம் ஆயிரக்கணக்கான படங்களை எடுத்துத் தள்ளிவிடுகிறார்கள். அதில் எதைத் தேர்வு செய்வது? எதை விடுப்பது? புகைப்படக்காரரர்களுக்கு எப்படித் தெரியும்? அதனால் அவ்வளவையும் கையடக்க கணினி சேமிப்பகத்தில் நம்மிடமே அனுப்பிவிடுகிறார்கள்.

கல்யாண விட்டுக்காரரர்கள் தேர்வு செய்து தந்த பின்னரே ஆல்பம் தயாரிக்க முடியும். அதைத் திறந்தால் ஆயிரக்கணக்கான படங்கள். எதைத் தேர்வு செய்வது? உலகிலேயே மிகவும் சிரமமான வேலை இதுதான். எல்லா படங்களும் அழகாக உள்ளன; எல்லா நிகழ்வுகளும் சடங்குகளும் முக்கியமானவை; எல்லா உறவும் நட்பும் முக்கியம். எதை நீக்குவது? பெண்ணும் பையனும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டும். அதற்கு அவர்களுக்கு நேரம் இல்லை. பாதி பார்த்துவிட்டு,

களைத்துப் போய், 'இன்னொரு நான் தேர்வு செய்யலாம்' என ஒத்திப் போட்டுவிடுகிறார்கள்.

'அந்தஇன்னொருநாள்'வருவதற்குள்குழந்தையும் பிறந்துவிடுகிறது; ஆல்பம் ஆசையும் போய்விடுகிறது. அப்படியே தேர்வு செய்து கொடுத்தாலும் சில நூறு படங்களை மட்டுமே ஆல்பமாகப் போட முடியும். மேலும் நூற்றுக்கணக்கான படங்கள் கணினியில் உறங்கும். இதற்குத்தான் லட்சங்களை வாரி இறைக்கிறார்கள்.

அறிதிறன்பேசி பயன்பாட்டுக்கு வந்த பின்னர் புகைப்படம் எடுப்பது, தற்படம் எடுப்பது அதிகம். ஒவ்வோர் அசைவையும் படம் எடுக்கிறார்கள். புது உடை போட்டால், வெளியே எங்கு போனாலும், உணவகம் சென்றால் உணவை, இப்படி ஒரு வழக்கம் வந்துவிட்டது. குழந்தை பிறந்தால் அதன் ஒவ்வொரு வளர்ச்சியையும் பதிவு செய்கிறார்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# வலய மட்ட சதுரங்கப் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸாவில் 8 பேர் மாகாண மட்டத்திற்கு



(எம் சியாஜ்)

இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கம் கல்வி அமைச்சுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இடையிலான புத்தளம் வலய சதுரங்கப் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 8 மாணவ மாணவியர் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.

மேற்படி புத்தளம் வலய பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டி கடந்த 22 மற்றும் 23ஆம் திகதிகளில் புத்தளம் ஆனந்தா தேசிய கல்லூரியில் இடம்பெற்றது.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 13 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆத்திப் 15 வயதுக்குற்பட்ட பெண்கள் பிரிவில் எம்.எஸ்.எப். சபீஹா 2ஆம் இடத்தையும் 15 வயதுக்குற்பட்ட ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆதில் ஹசன் ஐந்தாம் இடத்தையும் மற்றும் எம்.எம். மயிஸ் அஹமட் ஏழாம் இடத்தையும் 17 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் எம்.ஆர். ஆயிஷா மூன்றாம் இடத்தையும் 17 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எம்.ஏ.எம். ஆஷிப் 2ஆம் இடத்தையும், எஸ்.டி. இத்தர்ஷனன் 3ஆம் இடத்தையும், எம்.எஸ்.எம். சியாப் நான்காம் இடத்தையும் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தகுதி பெற்று கற்பிட்டி நகருக்கும் பாடசாலைக்கும் பெறுமை சேர்த்துள்ளதாகவும் இம்மாணவர்களின் வெற்றிக்காக பாடுபட்ட ஆசியர்களான அன்பஸ், பைசல், றியாஜ் ஆசிரியைகளான சகீலா, ஹிசானா, அஸ்ரிபா, அமிறுன்நிசா ஆகியோருக்கும் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எப் சாஜினாஸ் தெரிவித்துள்ளார்.(05)

# பார்க்கப் பார்க்கப் பரவசம்!



ஒரு பிரபலத்தைப் பார்த்தால், உடனே அவருடன் தற்படம் எடுத்துக் கொள்ள பலரும் ஆர்வமாக இருக்கிறார்கள். இப்படியே ஆயிரக்கணக்கான படங்கள் சேர்ந்துவிடுகின்றன.

கைப்பேசியிலிருந்து அவற்றை மாற்றி வேறு இடத்தில் சேமித்து வைக்கமுடியாதவர்கள் பல படங்களை அழிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆறு மாதம் முன்பு சுற்றுலா சென்றபோது எடுத்த படங்களை இப்போது மெனக்கெட்டு தேடிப் பார்க்கும் ஆர்வம் இல்லை.

ஃபிலிம் ரோல் போட்டு புகைப்படம் எடுத்த கேமராக்கள் மட்டுமே இருந்த காலகட்டத்தில் அநாவசியமாக போட்டோ எடுக்க மாட்டார்கள். குழந்தை தவழும் பருவத்தில் ஒரு படம், அதற்கு கிருஷ்ணர் வேடம் போட்டு ஒரு படம், பெண்ணுக்கு பூவைத்து ஜடை போட்டு எடுத்த படம், குழந்தைகள் வளர்ந்து, படித்து பட்டம் வாங்கிய போட்டோ, திருமணம் ஆன மணமக்களின் படம். அவ்வளவே. மற்றபடி படிப்புக்காகவும் வேலைக்காகவும் விண்ணப்பிக்க வேண்டி பாஸ்போர்ட் அளவு போட்டோ எடுப்போம்.

புகைப்படம் என்பது நினைவுகளின் மீட்சி; நிஜங்களின் பதிவு; கடந்து போன 'அந்த நொடியை' சிறைப்பிடித்து சேமித்து வைக்கும் காலப்பெட்டகம்; நம் மகிழ்ச்சியின் வித்து; பிரிவின் ஆறுதல்; காதலின் ஊற்று; நம் நினைவுகளை உறைய வைக்கும் அறிவியல் அதிசயம்.

அந்தக் காலத்தில் வீட்டின் வரவேற்பறையில் வரிசையாக மாட்டப்பட்டிருக்கும் படங்கள், கடந்த காலத்தின், கரைந்து போன உறவுகளின் நினைவுகள். இப்போது அவ்வாறு படங்களை மாட்டும் பழக்கம் இல்லாமல் போய்விட்டது. வாடகை வீட்டில் இருப்போர் 'சுவரில் ஆணி அடிக்கக் கூடாது' என்பதுதான் முதல் விதி. சொந்த வீடு கட்டுபவர்களும் ஆணி அடித்து சுவரைப் பாழ்படுத்துவதில்லை. ஆகவே சுவரில் படம் மாட்டும் கலாசாரம் போயே போய்விட்டது.

புகைப்படம் எடுப்பது, ரசிப்பது எல்லாம் சரி. ஆனால் அவற்றை சமூக வலைதளங்கில் பகிர்வது சில சமயங்களில் ஆபத்தை விலைக்கு வாங்குவதற்கு சமம். அதை இளம் பெண்கள் தவிர்க்கலாம்.

திருமணத்தைப் புகைப்படம்/ விடியோ எடுக்கப் பல லட்சங்களை வீணாக்கத் தேவையில்லை. முன்பு போல முக்கிய சடங்குகளையும், தருணங்களையும் எடுத்து, சிறிய ஆல்பம் தயாரித்தால் போதுமே.

'ரசித்து ஒளிப்படம் பிடிப்பது, வாழ்க்கையை ரகசியமாய் நேசிப்பது - இரண்டும் ஒன்றே' என்கிறார் உலகப் புகழ்பெற்ற புகைப்படக் கலைஞர் பர்க் அஸில்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நல்லிணக்க ஆணைக்குழுச் சட்டம் குறித்து கிளிநொச்சியில் ஆராய்வு



உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் மற்றும் உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான உத்தேச ஆணையம் இலங்கையில் வடக்கு கிழக்கில் நிலவும் மோதலில் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அநீதிகளை நிவர்த்தி செய்வதற்கு இலங்கையில் ஆணைக்குழுவொன்றை நிறுவுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றன.

அந்தவகையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான விளக்கத்தை வழங்கவும் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவதற்கான கலந்துரையாடல்கள் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நான்கு அமர்வுகளாக நடைபெற்றன.

இலங்கையில் தேசிய நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சமூக நீதியை மேம்படுத்தும் நோக்கில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடக்கால செயலகத்தின் ஏற்பாட்டில் குறித்த கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

1983 - 2009 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல்களின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிய நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படும் ஒரு சுயாதீனமான நிறுவனமாக உண்மை, ஒருமைப்பாடு மற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

உத்தேசஆணைக்குழு,பாதிக்கப்பட்ட தரப்பினரிடம்முறையாகதகவல்களைத் திரட்டல், வன்முறைகளின் போது நடந்த விடயங்களை அறிக்கையிடல், கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி எதிர்காலத்தில்அவ்வாறானசம்பவங்கள் நடைபெறாதிருக்கபரிந்துரைவழங்குதல் மற்றும் மோதலுக்குப் பிந்தைய இலங்கையில்தேசியநல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பாரபட்சமற்ற அமைப்பாகப் பயன்படுத்துவது இதன் நோக்கமாகும்.





அவற்றில் ஒரு கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி), திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

அடுத்த கலந்துரையாடல் இராணுவ உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், உள்ளிட்ட பலரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

மூன்றாவது கலந்துரையாடல் அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள்மற்றும்சிவில்சமூகங்களின்பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நடைபெற்றன.

நான்காவது கலந்துரையாடல் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், முன்னாள் போராளிகள், அங்கவீனமுற்றோர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இங்கு, நாட்டில் தேசிய நல்லிணக்கத்திற்கான உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் தற்போதைய வேலைத் திட்டங்கள் குறித்தும் இந்த சுயாதீன ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான உத்தேச சட்டமூலம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், இக்கலந்துரையாடலில் இணைந்திருந்த நபர்கள் ஆலோசனைகள் மற்றும் யோசனைகளை எழுத்து மூலம் முன்வைப்பதற்கான வழிவகை தொடர்பில் தெளிவூட்டப்பட்டது.

இந்த சந்திப்புக்களில் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்ச, சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி(கொள்கை) கலாநிதி சி. வை. தங்கராசா மற்றும் ஆசிப் போர்ட், இணைப்பாளர் சரத் கொத்தலாவல, சிரேஷ்ட நிறைவேற்றுஅதிகாரி(சட்டங்கள்)வை.எல். லொக்குநாரங்கொட, நிறைவேற்று அதிகாரி(பொது உறவுகள்) சௌமியா விக்ரமசிங்க மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்காலச் செயலகத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (05 - 113)



காலைக்கதிர் Kalaikkathir

## சரியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார, ஆட்சி நிர்வாக அறிவு முன்பள்ளிக் கல்விக்கு மேலாக வளரவில்லை. எவ்வாறாயினும், இந்த பிரச்சினை உக்கிரமடைந்த தருணத்திலேயே அதன் ஆழத்தை நான் உணர்ந்துகொண்டேன். தனியொரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் நான் இந்த நெருக்கடி குறித்து எடுத்துக்கூறினேன். தீர்வுகளையும் வலியுறுத்தினேன். சிலருக்கு இன்னும்அதன்பாரதூரம்புரியாமல் இருக்கிறது.

நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர், நாட்டைக் கட்டியெழுப்பபலநடவடிக்கைகளை மேற்கொண்டேன். அவை அனைத்தும்சரியானவைஎன்பதை அறிந்துகொள்ள அவர்களுக்கு இரு வருடங்கள் தேவைப்பட்டன. நான் இப்போது முன்னெடுக்கும் நடவடிக்கைகள் சரியானவை என்பதைப் புரிந்து கொள்ளவும் அவர்களுக்கு இன்னும் சில வருடங்கள் தேவைப்படும்.

சரியானது எது என்பது புரியும் வரையில் அவர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதை மட்டுமே செய்வார்கள். வெட்டிப் பேச்சு பேசுவோர் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பர். வீண் பேச்சு பேசுவோரும் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பர்.

அது பற்றியும் சற்றுப் பேச விருப்புகிறேன்.

நமது நாடு ஐஎம்எப் (IMF) ஆதரவைப் பெற்றுக்கொண்ட முதலாவதுமுறைஇதுவல்ல. இதற்கு முன்னதாக 16 தடவை ஐஎம்எப் ஆதரவு பெறப்பட்டுள்ளது. அந்த ஒவ்வொரு முறையும் இலங்கை தோல்வியடைந்தது. ஏன் அவ்வாறு நடந்தது? நாம் நிபந்தனைகளை மீறினோம்.நாங்கள்வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. நிதி ஒழுக்கத்தைப் பேணவில்லை.

ஐஎம்எப்வேலைத்திட்டத்தில்நாம் வெற்றிபெறுவதுவரலாற்றில்இதுவே முதல்முறையாகும். முன்பு ஐஎம்எப் இடம் உதவி கோரிய 16 தடவையும் நாம் வங்குரோத்து அடைந்த நாடாக இருக்கவில்லை. ஆனால் வங்குரோத்து நாடாக உதவி கோரி, அந்தத் திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு தலைமைத்துவம் வழங்கியதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அது இத்தோடு முடிந்துவிடாது. இதுஎமதுபயணத்தில்ஒருமைல்கல் மட்டுமே. இங்கிருந்து நாம் புதிய ஆரம்பத்தைப் பெற வேண்டும். தற்போது எங்களுக்கு சர்வதேச அங்கீகாரம்கிடைத்துள்ளது. மீண்டும் சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெற்றுள்ளோம். இவற்றை நாம் பயன்படுத்தி பொருளாரத்தை முன்னேற்ற வேண்டும். முழுமையான வெற்றியைப் பெற வேண்டும். நாம் முழுமையான வெற்றியைப் பெற்றால் நம் நாடு மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. அதற்காகவே நான் பாடுபடுகிறேன்.

ஐஎம்எப்செல்லஅவசியமில்லாத, வலுவான வினைத்திறனான வளர்ச்சியடைந்தபொருளாதாரத்தை நாட்டில் கட்டியெழுப்பவே நான் பாடுபடுகிறேன். அதற்காக நாம் உழைக்கிறோம்.

நானும்,எமதுஅமைச்சரவையும், நமது ஆளும் தரப்பும் அதற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கிறோம். உழைப்பது மட்டுமன்றி அதற்கான பயன்களையும் காட்டுகிறோம்.

எங்களை விமர்சிக்கும் சில குழுக்கள் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளன. எதிர்காலத்தில் ஆட்சிக்கு வர ஆசைப்படுவோர் இப்போதே ஜனாதிபதியையும் தெரிவுசெய்துவிட்டனர். அவர்களில் சிலர், ஆட்சிக்கு வந்தப் பின்னர் அமைச்சர்களை நியமிப்பது தொடர்பில் ஆழமாக ஆலோசனை நடத்துகிறார்கள்.

சிலர் இப்போதே அமைச்சுக்களைப்பகிர்ந்துகொண்டுள்ளனர். அவ்வாறு கனவு காணும் தரப்பினர், அவர்களின் மனைவியருக்கு எந்த அமைச்சுப்பதவிகளைவழங்குவது என்றும் சிந்திக்கிறார்கள்.

இந்தக் கனவு அமைச்சர்கள், இன்றைய எனது உரையை பற்றி நாட்டு மக்களிடம் எத்தனை பொய்களை சொல்லியுள்ளார்கள். ஊடக சந்திப்புக்களை நடத்தி பொய் சொன்னார்கள். அவைஅனைத்துமே பொய் என்பது நாட்டு மக்களுக்கு இப்போது தெரியவந்திருக்கும்.

நாட்டுக்கு எவ்வாறான வெற்றி கிட்டினாலும், ஏன் அவர்கள் இன்னும் இதனைவன்மமாகப்பார்க்கிறார்கள்? நாட்டிற்கு கிடைக்கும் நற்செய்தியை எதிர்மறையாக பார்ப்பது ஏன்? எல்லாவற்றிலும் அரசியல் ஆதாயம் பெற ஏன் முயற்சிக்கிறார்கள்? அதிகாரத்தைப் பெறுவதற்காக ஏன் நாட்டுக்கு துரோகம் செய்கின்றனர்? இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசியல் செய்வது ஏன்? அதற்கு இதுதான் காரணம்.

ஜனாதிபதி பதவிக்காக கடுமையாகப் போராடுகிறார்கள். நாம் நாட்டுக்காக போராடுகிறோம். அவர்களோதங்களுக்குக்கிடைக்கும் பதவிகள், பட்டங்கள் பற்றிக் கனவு காண்கிறார்கள். ஆனால் நாம் நாட்டின் வளர்ச்சி பற்றி கனவு காண்கிறோம்.

அவர்கள் அமைச்சுக்களைப் பகிர்ந்துகொள்ள திட்டமிடுகிறார்கள். நாம் நாட்டை கட்டியெழுப்ப திட்டங்களை வகுக்கிறோம். அதிகாரத்தைக் கோரி இலங்கையைச் சுற்றி வருகிறார்கள். பாடசாலைகளுக்குச் சென்றும் அதிகாரத்தை கேட்கிறார்கள். உலகம் முழுவதும் பறந்து நாட்டின் அதிகாரத்தைக் கேட்கிறார்கள். அதிகாரத்துக்காக அல்லும் பகலும் ஓடித் திரிகின்றனர்.

ஆனால் நாம் நாட்டுக்காக இரவு பகல் பாராமல் உழைக்கிறோம். நாடு முழுதுமாகச் சென்று மக்கள் தேவைகளைப்பூர்த்திசெய்கிறோம். பொருளாதாரத்தை வலுப்படுத்தும் திட்டங்களைஆரம்பிக்கிறோம். நான் உலகம் முழுவதும் சென்று நமது நாட்டின் வளர்ச்சிக்காக சர்வதேச ஆதரவைப் பெற்று வருகிறேன்.

இத்தகையபின்னணியில்நான் உங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

ஆரம்பத்திலிருந்தே பிரச்சினையைப்புரிந்துகொண்டுநடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்கிய என்னுடன் நாட்டை முன்னேற்றுவீர்களா? அல்லது இன்னும் பிரச்சினையை புரிந்து கொள்ளாமல், இருட்டில் தடவிக் கொண்டு, அதிகாரத்தைப் பெற முயற்சிக்கும் குழுக்களுடன் பயணிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் சரியான பாதையில் சென்று உங்களதும் நாட்டினதும் எதிர்காலத்தைமேம்படுத்துவீர்களா? அல்லது பயணத்தை மாற்ற வேண்டுமா?

தவறான பாதைக்குத் திரும்பினால் அல்லது தவறான பாதையில் பயணித்தால் ஏற்படும் விளைவுகளை நாம் அனைவரும் நன்கு அறிவோம். எனவே சரியான முடிவை எடுங்கள். அந்த முடிவை எடுக்கஉங்களுக்குமுழுஉரிமையும் சுதந்திரமும் உள்ளது. உங்கள் முடிவு ரணில் விக்ரமசிங்கவின் எதிர்காலத்தை தீர்மானிக்காது. நாட்டின் எதிர்காலத்தையும் உங்கள் எதிர்காலத்தையும் மட்டுமன்றி அது உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப் போகிறது.

பொருளாதாரம் படுகுழியில் வீழ்ந்து வங்குரோத்து நிலையிலிருந்த நாட்டை மீட்க எனது கட்சிக்கு பாராளுமன்றத்தில் அதிகாரம் இருக்கவில்லை. நான் நியமித்த அரசாங்க அதிகாரிகளும் இருக்கவில்லை. அமைச்சர்களும் இருக்கவில்லை. ஆனால் அவை எதுவுமேயில்லாமல், உலகையே வியப்பில் ஆழ்த்தும் வகையில் இரண்டு வருட காலத்தில் நாட்டை சுமூகமான நிலைமைக்கு கட்டியெழுப்ப என்னால் முடிந்தது. அதை யோசித்துப் பாருங்கள்.

இரண்டுவருடங்களுக்குமுன்பு வீதிகளில் எவற்றை கண்டோம்? இன்று எதனைக் காண்கிறோம்.

ஆபத்தான தொங்கு பாலத்திலிருந்து இலங்கை அன்னையை மீட்டுத் தருவதாக அன்று நான் வாக்குறுதி அளித்தேன். குழந்தையைப் பத்திரமாக மீட்டு வந்திருக்கிறேன். இப்போது என்ன நடந்தது? 'ஹுனுவடயே' நாடகத்தில் வருவது போல், குழந்தையைக் காக்க எந்த ஆதரவும் தராத குழுக்கள் தற்போது குழந்தையின் உரிமையைப் பெறப் போராடுகின்றனர். தொங்கு பாலத்தைக் கடக்கும் முன் குழந்தையைசொந்தமாக்கமுயற்சிக்கிறார்கள். குழந்தையை இரு பக்கமாக அன்றி அனைத்துப் பக்கங்களிலும் பிடித்து இழுக்கின்றனர்.

நாம் அறிந்த 'ஹுனுவடயே' நாடகத்தின்நிறைவில்,குழந்தையின் உரிமை உண்மையான தாய்ப்பாசமுள்ள அன்னைக்கு கிடைக்கிறது.

'தகுதியானவருக்குதகுதியானது கிடைக்கவேண்டும்.குதிரைசரியான வண்டியோட்டியிடம் கொடுக்கப்பட வேண்டும்' என்று நாடகத்தின் கதாசிரியர் கூறுகிறார்.

அந்தக் கதையில் வரும் நீதிபதி அஸடக்கைப் போன்று நீங்களும் சரியானமுடிவைஎடுக்கவேண்டும். அப்போது தகுதியானவருக்கு தகுதியானது கிடைக்கும். நமது நாட்டுக்கு ஒளிமயமான எதிர்காலம் கிட்டட்டும்- என்றார்.

## அதிபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரண்பாடுகள்உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி அதிபர்ஆசிரியர்கள்நேற்றையதினம் சுகவீன விடுப்புப் போராட்டம் மேற்கொண்டிருந்த நிலையில் பிற்பகல் அளவில் கொழும்பு கோட்டைதொடருந்துநிலையத்துக்கு முன்னால் ஒன்று கூடி பெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

அதிபர், ஆசிரியர் சங்கக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால்பிற்பகல்முதல்ஒன்றுசேர ஆரம்பித்தனர். பின்னர் அவர்கள் தமதுகோரிக்கைகளைமுன்வைத்து குரல்எழுப்பினார்கள். அச்சமயத்தில் ஒலிபெருக்கிமூலமாக பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவினை அறிவித்தார்கள்.

அத்துடன் கலைந்து செல்லுமாறும்பகிரங்கமானகோரிக்கையை விடுத்தனர். எனினும் அதிபர், ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் எதிர்ப்புநடவடிக்கைகளைதொடர்ந்த நிலையில் முதலில் அவர்கள் மீது நீர்த்தாரைப் பிரயேகம் செய்யப்பட்டது.

அதற்கு எதிராக போராட்டக்காரர்கள்அணிவகுத்துகோசங்களை எழுப்பிய நிலையில், அதிபர் ஆசிரியர்கள்மீது கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் அதிபர், ஆசிரியர்கள் சிதறி ஓடினர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இன்யைதினமும் பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பங்கேற்றகப் போவதில்லை என்று அறிவித்துள்ளனர்.

## பொதுநலவாய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து, அதன் அதிகாரங்கள்குறித்துசிறிலங்காவின் மீயுயர் நீதிமன்றுகளில் ஏறத்தாழ 30 வழக்குகள் விசாரிக்கப்பட்டு அதன் தீர்ப்புகள் அனைத்தும், அரச கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரைக்கும், அனைத்து அதிகாரங்களும் , கொழும்பை மையப்படுத்திய மத்திய அரசிடமே இருக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது, அதிகார பகிர்வுக்குஎதிராகவேநீதிமன்றங்கள் தீர்ப்புகளை அளித்திருக்கிறன.

உச்ச நீதிமன்று 13ஆம் திருத்த அதிகாரங்கள் குறித்து இதுவரைகாலமும் வழங்கிய தீர்ப்புக்களின் அடிப்படையிலும், 13 ம் திருத்தமானது, சிறிலங்காவின் சட்டவரம்புகளின் பிரகாரம் அது 'முழுமையாக' அமுல்படுத்தப்பட்டே உள்ளது.

இலங்கைக்கான புதிய அரசமைப்பினை உருவாக்குவதற்கான வரைபைத் தயாரிக்கும் பணிகள் கடந்த 2016இல் ஆரம்பித்து - 2019 ஜனவரியில் நிறைவடைந்தது. ஆந்த வரைபானது தற்போதுள்ள ஒற்றையாட்சிக் கட்டமைப்பினை விடவும் மிகவும் இறுக்கமான ஒற்றையாட்சி கட்டமைப்புக்கான வரைபாகும். அரச கட்டமைப்பு ஒற்றையாட்சி அரசமைப்பாக இருக்கும் வரையில், அர்த்தமுள்ள சுயாட்சியை அனுபவிக்கவோ அல்லது சுயநிர்ணய உரிமையை உரியமுறையில் பிரயோகிக்கவோ முடியாது. இந்த காரணிகளின் அடிப்படையிலே எமது அமைப்பானது, 13 ஆம் திருத்தினைத் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாகவேனும் கருத்திலெடுக்க கூடாதெனும் நிலைப்பாட்டினை ஆரம்பம் முதல் உறுதியாகவுள்ளது.

ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வையும் தமிழர்கள் நிராகரிப்பதுடன், தமிழர்தேசத்தை அங்கீகரித்து அதை பாதுகாக்கின்ற வகையிலானதும், தமிழர்கள் ஒருபோதும் இழக்கமுடியாத தங்களது சுயநிர்ணய உரிமையை, அனுபவிக்க கூடியதுமான ஒரு சமஸ்டித்தீர்வுக்கானதன் ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் எனவும் எமது அமைப்பு பிரித்தானியாவை கோரிநிற்கின்றது.

மேலும்ஐ.நாமனிதஉரிமைகள் பேரவைக்குள் கடந்த 12 ஆண்டுகளாக முடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் விவகாரத்தினை அங்கிருந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அல்லது சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்

ஐநா மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர் ஒருவரை இலங்கையின் பெயர்குறித்து வடக்கு கிழக்கு நிலைமைகள்தொடர்பானஅறிக்கையிடலுக்காக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்

கடந்த 14 ஆண்டுகளாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரதான அமர்வுகளில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்;ட தீர்மானங்கள் மீதான இடையீட்டு விவாதங்களின்போதானஎந்தவொரு சந்தற்பத்திலும், இலங்கையில் பாதிக்கப்பட்டதரப்புயார்என்பதுபற்றி இதுவரை வெளிப்படையாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் ஆனால் கடந்த 2024 மார்ச் 1 திகதி ஐநா மனித உரிமைகள் பேரவையில் மியன்மார் நாடு குறித்து பிரித்தானியா சமர்ப்பித்த அறிக்கையில் 6 தடவைகள் றோகின்யா இன்த்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவேஎதிர்காலத்தில்ஐ.நமனித உரிமைகள்பேரவையில்இலங்கை தொடர்பான தீர்மானங்களில் பாதிக்கப்பட்ட தரப்பு தமிழ்கள் என்பதனைத் தெளிவாக குறிப்பிட பிரித்தானிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் போரினால் அழிவடைந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் கடந்த 15 ஆண்டுகளாக இலங்கை அரசினால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தினை போரால் பாதிக்கப்பபட்ட பிராந்தியமாகப் பிரகடனம் செய்யவும் இப்பிரதேச அபிவிருத்திக்கென சர்தேச நிதிஉதவியைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்

தமிழர் தாயகத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ள சிங்களமயமாக் கல்களையும் பௌத்த மயமாக் கல்களையும் தடுத்து நிறுத்த உடனடி அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டுமெனவும்.

கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் கைது செய்யப்படுவதும் சிறையிலடைக்கப்படுவதும் பொய்வழக்குகள் தொடர்வதும் இன்னமும் தொடர்கின்றது. இக்கொடிய சட்டத்தை நீக்க பிரித்தானிய அரசு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் 15 - 29 வருடங்கள் வரை சிறையில்அடைக்கப்பட்டுள்ளதமிழ் இளைஞர்கள் 11 பேரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும். என்ற விடயங்கள் வலியுறுத்தப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த போது மாறி மாறி ஆட்சிப்பீடமேறும் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளையும் கட்டமைப்புசார் இனவழிப்பையும்தீவிரப்படுத்திவரும் நிலையில் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை புறக்கணப்பதென எமது அரசியல் இயக்கம் தீர்மானித்துள்ளது என்பதனையும் ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்படும் நிலையிலேயே முடிவுமறுபரிசீலனைசெய்யப்படும் என்பன உட்பட பல விடயங்கள் பாராளுமன்ற உறுப்பினரால் வலியுறுத்தப்பட்டுள்ளது

## சட்டமா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தினைநீடிப்பதற்கு ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிவைச் செய்திருந்த நிலையில் அதனை அரசமைப்பு பேரவை நிராகரித்திருந்தது.

இந்நிலையில், சபாநாயகர் மஹிந்தயாப்பாஅபேவர்த்தனவின் இல்லத்தில் நேற்று மாலை 6 மணிக்குஅரசமைப்புப்பேரவையின் அவசரக் கூட்டம் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதன்போதே சட்டமா அதிபரின் பதவிக்காலத்தினை நீடிக்கும் ஜனாதிபதியின் யோசனை முன்வைக்கப்பட்டபோது அது மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்படத்தகக்து.

## பரிஸ் கிளப்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கான கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் இணைந்துகடன்மறுசீரமைப்புக்குத் தலைமைதாங்கின. ஆஸ்திரேலியா, ஒஸ்டிரியா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், ஜெர்மனி, ஹங்கேரியா, கொரியா, நெதர்லாந்து, ரஷ்யா, ஸ்பெயின், ஸ்வீடன், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை இந்த உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக இருந்தன.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள்மற்றும்சீனாஎக்ஸிம் வங்கி மூலம் மறுசீரமைக்கப்பட வேண்டியகடனின்ஒருங்கிணைந்த மதிப்பு 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து இலங்கை அந்நியசெலாவணிக்கையிருப்பை இழந்தது. இதனால்இந்தக்கடனைத் திருப்பிச்செலுத்த முடியாத நாடாகத் தன்னை அறிவித்தது.

இலங்கையை மீண்டும்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## பாரிஸ் கிளப்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயல்பு நிலைக்கு கொண்டுவர சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடப்பட்டது. கடன் நிலைபேற்றுத் தன்மையற்ற நாடுகளுக்கு கடன் வழங்க சர்வதேச நாணய நிதியத்திற்கு முடியாது என்பதால் இலங்கை தனது அரச கடன் மறுசீரமைக்கும் செயற்பாட்டை ஆரம்பித்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைபேற்றுத்தன்மை பகுப்பாய்வு ஆரம்பத்தில் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் மூலம் கடன் நிவாரண அளவு தீர்மானிக்கப்படுகிறது. அதன் பின்னர், குறித்த கடன்வழங்குநர்கள் மற்றும் கடனில் உள்ள நாடும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைபேற்றுத்தன்மை பகுப்பாய்வு மூலம் காட்டப்படும் இலக்கை அடையத் தேவையான பணிகளைபூர்த்திசெய்யவேண்டும். இதற்காக கடன் மறுசீரமைப்புப் பேச்சுக்களை இலங்கை தொடர்ந்து முன்னெடுத்தது.

சர்வதேச நாணய நிதிய கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலக்குகளின் அடிப்படையில் வழங்கப்படும் கடன் நிவாரணம் ஒவ்வொரு நாட்டிற்கும் மாறுபடும். கடன் வழங்கும் நாடுகள் வெவ்வேறு வழிகளில் கடன் நிவாரணம் வழங்குகின்றன. உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழு மற்றும் சீனாவின் எக்ஸிம் வங்கி போன்ற உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் இவற்றை வெவ்வேறாக தீர்மானிக்கின்றன. காலத்தைநீடித்தல், விதிமுறைகளை தளர்த்துதல் மற்றும் வட்டி விகிதங்களைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் கடன் நிவாரணம் வழங்கப்படுகிறது.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்குழுமற்றும்சீனாவின்எக்ஸிம் வங்கியுடனான மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் இரண்டும் குறிப்பிடத்தக்க கணிசமான கடன் நிவாரணத்தை இலங்கைக்கு வழங்கியுள்ளன.

பொருளாதாரம் மீளவும் வழமைக்கு திரும்பும் வரையில் எதிர்காலத்தில் கடன் சேவைத் திறன் மேம்படும் வரை குறுகிய காலத்தில் இலங்கைக்கான தற்போதைய கட்டணச் சுமையை இது குறைக்கும்.

எட்டப்பட்ட கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் பின்வரும் நன்மைகளை உள்ளடக்கியது:

1. நிதி நிவாரணம்:

இலங்கையின் வரிவருவாயை கடனை செலுத்துவதற்கு பதிலாக அத்தியாவசியபொதுசேவைகளுக்கு பயன்படுத்த முடியும். இது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு கால அவகாசத்தை வழங்குகிறது.

2. வெளிநாட்டு நிதி:

முக்கிய உள்கட்டமைப்புதிட்டங்களுக்கு இருதரப்பு நிதியுதவி வசதிகளைப் பெறுவதை மீண்டும் தொடங்கலாம். வரவு செலவுத் திட்டத்தின்மூலதனசெலவினங்களை ஆதரிக்க குறுகிய கால வெளிநாட்டு நிதி கிடைப்பதில் இது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இது நிர்மாணத்துறை போன்ற துறைகளில் சாதகமான விளைவுகளையும், முக்கியமான உள்கட்டமைப்பு மேம்பாட்டில் நடுத்தர முதல் நீண்ட கால சாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தும்.

3. கடன் தரப்படுத்தல்:

இலங்கையின் கடன் தரப்படுத்தலை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு ஒரு முக்கியமான முன்னெடுப்பாக உத்தியோகபூர்வ கடன் மறுசீரமைப்பின் முடிவு அமையும். வர்த்தக பிணைமுறி உரிமையாளர்களின் கடன்களும் விரைவாக மறுசீரமைக்கப்பட்ட பின்னர், அது கடன் தரப்படுத்தலின் உயர்வுக்கு வழிவகுக்கிறது.

உத்தியோகபூர்வ கடன் மறுசீரமைப்பின் முடிவானது வெளிநாட்டு நிதியுதவிக்கான எளிதான பிரவேசம் என்பதுடன் குறைந்த செலவு போன்ற வழிகளின் ஊடாக குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்கும். இது வர்த்தகநிதியிலிருந்துவங்கிகளுக்கு இடையேயான நிதியுதவி வரை அனைத்துதுறைகளிலும்தாக்கத்தை ஏற்படுத்தும்.




காலைக்கதிர் Kalaikkathir

# கரபந்தாட்ட பயிற்சிக்கு அழைத்துசெல்வதாகக்கூறி புத்தளத்தில் சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## பயிற்றுநர் கைது

கரபந்தாட்ட பயிற்சி முகாமிற்கு அழைத்துச் செல்வதாகக் கூறி சிறுவன் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கரபந்தாட்ட பயிற்றுநர் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என பன்னல பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம், கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 15 வயதுடைய சிறுவனே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், சிறுவனின் பெற்றோரிடம் சிறுவனை புத்தளம், வென்னப்புவ பிரதேசத்தில் உள்ள கரபந்தாட்ட பயிற்சி முகாமிற்கு இரண்டு நாள்கள் பயிற்சிக்காக அழைத்துச் செல்வதாகக் கூறியுள்ளார்.

பின்னர், சந்தேக நபர் சிறுவனை ஏமாற்றி கடந்த 22 ஆம் திகதி குருணாகல், இரபடகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு அழைத்துச் சென்று சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவன் கல்வி கற்கும் பாடசாலையின் கரபந்தாட்ட பயிற்சியாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளைபன்னல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# சாவகச்சேரியில் வீதியை புனரமைத்து தருமாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம்சாவகச்சேரிபிரதேசசபைக்குட்பட்ட மீசாலை வடக்கு தட்டாங்குளம் வீதியினை புனரமைத்து தருமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்று (புதன்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

50 வருடங்களாக புனரமைக்கப்படாத இந்த வீதியால் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்துகின்ற போதிலும் மிக மோசமான நிலையில் வீதி பாதிக்கப்பட்டுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரவிக்கின்றனர்.





வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் குறித்த வீதியைப் பயன்படுத்தும் 5 கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஐவர் ஆளுனரின் செயலாளரை சந்தித்து ஆளுநரின் ஊடாக ஜனாதிபதிக்கான மகஜரை கையளித்தனர்.

# சந்நிதியில் விற்ற மிக்சருக்குள் பொரிந்த பல்லியும் சேர்ப்பு



யாழ்ப்பாணம் செல்வ சந்நிதி ஆலய சூழலில் விற்கப்பட்ட மிக்ஸரில் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டுள்ளது.

சந்நிதி ஆலயத்தில் திங்கட்கிழமை இரவு, ஆனிப்பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதன் போது ஆலயத்திற்கு பெருமளவான பக்தர்கள் வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் ஆலயத்திற்கு வருகைதந்த ஒருவர் ஆலய சூழலில் உள்ள இனிப்பு கடை ஒன்றில் மிக்ஸரை வாங்கிய போது, அதனுள் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டுள்ளது.

அது தொடர்பில் அப்பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதைஅடுத்து,பல்லியுடன் காணப்பட்ட மிக்ஸரை சான்று பொருளாக பெற்றுக்கொண்ட பொது சுகாதார பரிசோதகர் குறித்த இனிப்பு கடைக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

குறித்த வழக்கு இன்று (வியாழக்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.(05)

# அம்மாச்சி உணவகம் சங்கானையில் திறப்பு



யாழ்ப்பாணம் சங்கானையில் அம்மாச்சி பாரம்பரிய உணவகம் திறப்புவிழா செவ்வாய்க்கிழமை வலிகாமம் மேற்கு பிரதேசசபை செயலாளர்ச.பாலரூபன்தலைமையில் இடம்பெற்றது .

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராகவடக்குமாகாணஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்துகொண்டு பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கும் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில்கௌரவவிருந்தினர்களாக வடமாகாணம்உள்ளூராட்சிஅமைச்சு செயலாளர் செ.பிரணவநாதன், வடமாகாணம் உள்ளூராட்சி



திறந்துவைத்தார்.

நிகழ்வில் வரவேற்புநிகழ்வுகளை தொடர்ந்து பாரம்பரிய அம்மாச்சி உணவகம்வடக்குமாகாணஆளுநரால் நாடாவெட்டி திறந்து வைக்கப் பட்டு உணவகத்தை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து வலிமேற்கு பிரதேசத்தின் எழுத்தாளர்கள், விவசாயிகள் கௌரவிக்கப்பட்டதுடன் ஆணையாளர் தேவனந்தினி பாபு, யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன், சங்கானை பிரதேச செயலர் கவிதா, சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் யோ.யதுநந்தனன் கலந்துகொண்டதுடன் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டமைகுறிப்பிடத்தக்கது. (05)

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

மாவட்டதேர்தல்அலுவலகங்கள் ஊடாக குறித்த கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

அரச நிறுவனங்களின் வாகனங்கள் குறித்த தகவல்களும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. அதற்கான விசேட படிவமும் வெளியிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள்ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல வேண்டும் என்றும் நீண்டகால வளர்ச்சி நோக்கில் வெளிப்படைத் தன்மை மற்றும்நிலையானமாற்றங்களை உள்ளீர்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# யாழில் பனைமரம் முறிந்து விழுந்து சிறுவன் காயம்



யாழ்ப்பாணத்தில் திடீரென வீசிய கடும் காற்று காரணமாக குடிசை ஒன்றின் மீது பனை மரம் முறிந்து விழுந்ததில் சிறுவன் ஒருவன் காயங்களுக்கு உள்ளாகியுள்ளான்.

காரைநகர் களபூமி பகுதியில் திங்கட்கிழமை மாலை மினி சூறாவளி வீசியதில் , குடிசை ஒன்றின் மீது பனை மரம் முறிந்து விழுந்துள்ளது.

அதன்போது குடிசையில் இருந்த சிறுவன் காயங்களுக்குள்ளானநிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

குறித்த குடிசை வீட்டில் நால்வர் கொண்ட குடும்பம் வசித்து வந்ததாகவும் , குடிசை மீது பனைமரம்முறிந்துவிழுந்ததால் , அவர்கள் தங்குவதற்கு வீடின்றி இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# முறைப்பாடு குறித்து விசாரிக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல்

## சந்தேகநபர் தப்பியோட்டம்

முறைப்பாடொன்று தொடர்பில் விசாரிப்பதற்காக சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பொல்லால் தாக்கி காயப்படுத்திய சம்பவம் கண்டி, பூஜாப்பிட்டிய, போதொட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

பூஜாப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரொருவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர், இரண்டு சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்று தொடர்பில் விசாரிப்பதற்காக பூஜாப்பிட்டிய, போதொட்ட பிரதேசத்திற்கு செவ்வாய்க்கிழமை சென்றுள்ளார்.

இதன்போது, தாக்குதலுக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர், முறைப்பாட்டுடன் தொடர்புடைய இரண்டு சகோதரர்களையும் ஒன்றாக சந்தித்து முறைப்பாடு தொடர்பில் விசாரித்துக் கொண்டிருக்கும் போது இரண்டு சகோதரர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தரை பொல்லால் தாக்கியுள்ளார்.

இதனையடுத்து, காயமடைந்த பொலிஸார் உத்தியோகத்தர் கண்டி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தையடுத்து சந்தேக நபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இலங்கைக்கு கஞ்சா கடத்தமுயன்ற மூன்று பேர் இந்தியாவில் கைது

இலங்கைக்கு கஞ்சா கடத்துவதற்காக இந்தியாவில் ராமேஸ்வரத்தில் விடுதியில் பதுங்கி இருந்த இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கஞ்சா மற்றும் இலங்கை ரூபா நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் இலங்கைக்கு மிக அருகில் இருப்பதால் தனுஷ்கோடி கடல் வழியாக நாட்டு படகுகளில் இலங்கைக்கு கஞ்சா, ஐஸ் உள்ளிட்ட போதை பொருள்கள் அதிக அளவு கடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ராமேஸ்வரத்தில் தங்கி தனுஷ்கோடி கடல் வழியாக போதைப் பொருள் கடத்தல் தொழில் செய்வதற்கு புத்தளம் மாவட்டம் கல்பிட்டியைச் சேர்ந்த அந்தோணி பிரவீன் (வயது 35) என்பவர் விமான மூலம் ஜூன் மாதம் முதலாம் திகதி சென்னைக்கு சென்றுள்ளார். அங்கிருந்து ராமேஸ்வரம் சென்று தனியார் தங்கும் விடுதியில் அறை எடுத்து தங்கயுள்ளார்.

பின்னர் இலங்கையைச் சேர்ந்த அந்தோணி பிரவீன் பெங்களூர், வேளாங்கண்ணி உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று அங்குள்ள கஞ்சா வியாபாரிகள் பலரை சந்தித்து கஞ்சா கொள்முதல் செய்வதற்காக விசாரித்ததாக சொல்லப்படுகிறது.

பின்னர் ராமேஸ்வரம் புதுரோடு பகுதியைச் சேர்ந்த உமா செல்வம்(வயது 45) என்பவர் மூலம் பேக்கரும்பு பகுதியைச் சேர்ந்த கஞ்சா வியாபாரி தியாகராஜன் (வயது 57) என்பவரை சந்தித்து அவரிடம் இருந்து கஞ்சா பொட்டலங்களை வாங்கி தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு படகு மூலம் கஞ்சா கடத்துவதற்கு முயற்சி செய்து வந்துள்ளார்.

மேலும் அந்தோணி பிரவீனுக்கு இலங்கை மன்னாரைச் சேர்ந்த சுதாகர் என்பவர் இரண்டு தவணையாக கஞ்சா கொள்முதல் செய்ய பணம் அனுப்பியுள்ளார்.

அந்த பணத்தில் அந்தோணி பிரவீன் கஞ்சா தரம் குறித்து தெரிந்து கொள்வதற்காக முதல் கட்டமாக 2 கிலோ கஞ்சா பொட்டலத்தை தியாகராஜனிடம் வாங்கியுள்ளார்.

இதனிடையே இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார் அந்தோணி பிரவீனை சுற்றி வளைத்து கைது செய்து அவர் தங்கி இருந்த அறையை சோதனை செய்த போது அவரிடம் இருந்து சுமார் ஒன்றரை கிலோ கஞ்சா மற்றும் இலங்கை ரூபா 50,000 உள்ளிட்டவைகள் பறிமுதல் செய்யப்பட்டது.

அதை தொடர்ந்து அந்தோணி பிரவீனை தனுஷ்கோடி காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று நடத்திய விசாரணையில் தியாகராஜனிடம் கஞ்சா பொட்டலங்களை வாங்கி உமா செல்வம் என்பவர் மூலம் நாட்டுப்படகில் இன்னும் ஓரிரு நாட்களில்; சுமார் 400 கிலோ கஞ்சா பொட்டலங்கள் அடங்கிய மூட்டையை இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்தது தெரியவந்துள்ளது.

இதையடுத்து தியாகராஜன், உமா செல்வம் இருவரையும் கைது செய்த பொலிஸார் இலங்கையை சேர்ந்த அந்தோணி பிரவீன் உட்பட மூவர் மீது வழக்கு பதிவு செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைக்கு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி மூவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# காட்டு யானை தாக்கியதில் வீடுகள் சொத்துகள் சேதம்

## முதியவர் காயம் வைத்தியசாலையில் சேர்ப்பு





(ஹஸ்பர் ஏ.எச்.

திருகோணமலை மாவட்டம் சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள சிரிமங்களபுர மெதகம கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் வீடு மற்றும் உடைமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன என வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். குறித்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இக்காட்டு யானை தாக்குதலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

இவ்வருடத்தில் மாத்திரம் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் யானை தாக்குதலுக்கு இலக்காகி சேதமாக் கப்பட்டுள்ளன எனவும் கடந்த வாரம் 65 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் ஒருவர் யானை தாக்கியதில் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இக்காட்டு யானை தொல்லையில் இருந்து தங்களை பாதுகாக்குமாறு அப்பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

(05)



# மின்சாரம் தாக்கி உயிருக்குப் போராடிய நிலையில் மீட்கப்பட்ட இரு இளைஞர்கள் வைத்தியசாலையில்




புதுக்குடியிருப்பு நகர பகுதியில் அமைந்துள்ள தனியார் கம்பனி ஒன்றில் மின்சாரம் தாக்கியதில் இரு இளைஞர்கள் மீட்கப்பட்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் இடம்பெற்றுள்ளது .

வேணாவில் மற்றும் புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தை சேர்ந்த 20 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு மின்சார தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர் .

புதுக்குடியிருப்பு சந்தி பகுதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் குறித்த கம்பனியின் தண்ணீர் தொட்டியினை சுத்திகரிக்க கட்டட மேல்பகுதிக்கு சென்றபோது மின்சாரம் தாக்கி கீழே விழுந்துள்ளார்.

மேலே சென்றவரை காணவில்லை என அருகில் உள்ள பலசரக்கு கடையில் பணிபுரியும் ஊழியர் கட்டட மேற்பகுதிக்கு சென்றபோது குறித்த இளைஞனுக்கும் மின்சாரம் தாக்கி மாடியிலிருந்து தூக்கி கீழே வீசப்பட்டார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட இருவரும் சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# ஆக்க முயல்வனவாக ஊடகங்கள் இருக்கவேண்டும் சமூகத்தை அழிக்க முயல்வனவாக இருக்கக்கூடாது

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்க செயலர் லயன் சி.ஹரிகரன் வேதனை

நாடு பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள இந்த நேரத்தில் ஊடகங்கள் தமது பிரபலத்துக்காக சமூகத்துக்கு ஆக்க முயல்வனவற்றை விடுத்து அழிக்க முயல்கின்ற செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது வேதனையைத் தருகின்றது. இதனால் எமது சமூகம் பெருமளவு இழப்பைச் சந்திக்கின்றது என்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

- இவ்வாறு மிகவும் வேதனையுடன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளர் லயன் சி.ஹரிகரன்.

பல்வேறு சமூக செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தி அளப்பெரும் மக்கள்சேவை ஆற்றிய கொடை வள்ளல் தியாகி அறக்கொடை நிறுவுநர் தியாகேந்திரன் வாமதேவன் தொடர்பில் அவரைப் பற்றி வெளிவந்த விமர்சனங்களால் அவரது சமூக சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாகவே அவர் இவ்வாறான ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தியாகி அறக்கொடை நிறுவுநர் தியாகேந்திரன் வாமதேவன் ஐயா அவர்கள் சாதாரண மக்கள் சேவையை விடுத்து, எமது வடமாகாணத்தின் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கும் அளப்பெரும் சேவையாற்றிய ஒரு பெருந்தகை. சுகாதார அமைச்சால் நிதிப்பிரச்சினையால் ஆற்றமுடியாது உள்ள பல விடயங்களை இவர் எந்த ஆடம்பரமுமில்லாமல் எத்தனையோ ஆயிரக் கணக்கான நோயாளர்கள் பயன்பெறும் அளவுக்கு ஆற்றிய வள்ளல்.

இன்றைக்கு அவர்மீது எழுந்துள்ள விமர்சனத்தால் அவர்மனஉளைச்சலுக்குஉள்ளானதால்தனது அத்தனை சமூகப் பணிகளையும் இடைநிறுத்தியுள்ளார்.

எந்தஊடகங்களுக்குமே தெரியாமல் அவர் தினமும் பல ஆயிரம் நோயாளர்கள் பயன்பெறும் அளவுக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு ஆற்றும் சேவைகளை, அதன் நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் பொறுப்புள்ள செயலாளர் என்ற அடிப்படையில் அவரால் கிடைக்கப்பெற்ற சேவைகளை இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச்செல்வதால் எமது சங்கத்தால் இவரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக 'தியாகேந்திரன் கிளினிக் சென்றர்' என்ற கிளினிக் தொகுதியை 80 லட்சம் ரூபாவுக்கு நவீன வசதிகளுடன் அமைத்துத் தந்தார். இதனால் கிழமை நாள்களில் 500 பேர் வரையிலான நோயாளர்கள் பயன்பெறுகின்றார்கள்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கு சமையலாளரை எமது நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் நியமித்து அவர்கள் இருவருக்கும் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் இருவருக்கும் மாதா மாதம் 60 ஆயிரம் ரூபாவை ஒவ்வொரு மாதமும் வழங்கினார். இன்று இவர்களின் விமர்சனத்தால் அவர் மனமுடைந்து அந்தக் கொடுப்பனவை நிறுத்தியுள்ளார். இதனால்விடுதிகளில்இருந்துசிகிச்சை பெறுகின்ற எத்தனையோ புற்றுநோயாளர்கள், மனநோயாளர்கள் உள்ளிட்ட நோயாளிகள் பாதிப்படைந்துள்ளனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை ஆண்கள் விடுதிஸ்ரீயின் மல சல கூடம், சமையலறை உட்பட நோயாளர்களுக்கு அதிமுக்கியமான பல்வேறு திருத்தவேலைகளுடன் நவீனமயப்படுத்துவதற்கு ஒரு கோடி ரூபா வரையில் தேவைப்படுவதாக அவரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். அவர் அதற்கான சம்மதத்தை வழங்கி, வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதும் அவர்பற்றிய விமர்சனத்தை இவர்கள் கிளப்பிவிட்டார்கள். இதனால், அவர் ஆற்றவிருந்த அந்த வேலைகளும் தடைப்பட்டுப் போயுள்ளன.

சில ஊடகவியலாளர்கள் சமூகத்துக்கு கிடைக்கின்ற நன்மைகளை நோக்காது, தமது சனலை பிரபல்யப்படுத்துவதற்காக சேவையாளர்கள் மீதான மறுபக்கத்தை நோக்கி சமூகத்துக்கு எவருக்குமே தெரியாமல் கிடைக்கின்ற எத்தனையோ விடயங்கள் தடைப்பட்டுப் போகின்றன.

இதில் நான் குறிப்பிட்ட விடயங்கள் நான் செயலாளராகக் கடமையாற்றுகின்ற தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலைக்குஇவரால்கிடைக்கப்பெற்ற எனக்குத் தெரிந்த விடயங்கள் மட்டுமே. தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்கு எனக்குத் தெரியாமல் அங்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் வைத்திய நிபுணர்கள், வைத்திய அத்தியட்சகர்களாக இருப்பவர்கள், தாதிய சேவையாளர் என இவரிடம் எவ்வளவோ உதவிகளைப் பெற்றிருக்கலாம்.

இதனை விட, யாழ்.போதனா வைத்தியசாலை, மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்கள், கல்வி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் என்று இவரிடம் பயன் பெறுபவை ஏராளம்.

ஆகவே, ஊடகங்கள் சமூகம் நோக்கிய பார்வை இருக்கவேண்டும். எமது மண்ணில் பணம் படைத்தவர்கள் ஏராளம். ஆனால், பிறக்கும் போதே கொடைக் குணம் படைத்தவர்கள் அரிதிலும் அரிதே. எல்லா மனிதர்களிலும் சக, சய இரு பக்கங்களும் உள்ளன. நல்ல சேவைகளை போற்றவேண்டும். தீய பக்கங்களை கண்டுகொள்ளக்கூடாது. இந்துக்களின் ஆன்மீகப் பதிகங்களில் கூறப்படுகின்றமை

போன்று 'வாயே வாழ்த்துக் கண்டாய்...' என்பதற்கிணங்க நல்ல ஆரோக்கியமான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பனவாக எமது வடக்கு ஊடகங்கள் இருக்கவேண்டும். சமூகத்துக்குபயனுள்ளவிடயங்களுக்குமுன்னுரிமை கொடுக்கவேண்டும். - என்றுள்ளது.

(05)

# பறகஹதெனிய பாடசாலைக்கு திறன் வகுப்பறை கையளிப்பு




(அஹ்சன் அப்தர்)

நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகள் வழங்கும் சக்வல நிகழ்ச்சித் திட்டம் ஊடாக பறகஹதெனிய தேசிய பாடசாலைக்கு சிமாட் வகுப்பறை வழங்கும் நிகழ்வு பறகஹதெனிய தேசிய பாடசாலையில் நடை பெற்றது.

திறன் வகுப்பறை அங்குரார்ப்பண நிகழ்வுக்குச் சமாந்தரமாக க.பொ.த (உ.ஃத) 2023 இல் திறமைச்சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றமையும் ஒரு விசேட அம்சமாக அமைந்தது.

இந்நிகழ்வின் போது பாடசா லைக்கான கேட்போர் கூடம் தொடர்பிலான வேண்டுகோள் அதிபர் மற்றும்பாடசாலைமாணவர்கள்சார்பில் உரைநிகழ்த்தியமாணவிஆகியோரின் உரைகளூடாக எதிர்க்கட்சித் தலைவரிடம் முன்வைக்கப்பட்டு, அது குறித்து எதிர்க்கட்சித் தலைவரின் நேர்ப்பாங்கான எதிர்வினை கிடைக்கப்பெற்றமையும் பாடசாலை சமூகம் மத்தியில் ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

இந்நிகழ்வில் அரசியல் அபிலா ஷைகள், கட்சி வேற்றுமைகளைத் தாண்டி 'எமது பாடசாலை' என்ற ஒற்றைப்புள்ளியில் சங்கமித்து பிரதேச மக்கள் பெருந்திரளாக ஒன்று திரண்டிருந்ததுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ அலவதுவல, அஷோக அபேசிங்க, ஐக்கியமக்கள்சக்தியின்பறகஹதெனிய தொகுதி ஒருங்கிணைப்பாளர் முஆத் ஃபாரூக் ஆகியோரும் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர். (05)

# 'எமாறெல்ட் சம்பியன் கிண்ணம் – 2024' தனதாக்கியது பிளைங் ஹோர்ஸ் அணி!





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நிந்தவூர் எமாறெல்ட் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், 'எமாறெல்ட் சம்பியன் கிண்ணம் - 2024' என்றநாமத்தில்அம்பாறைமாவட்டத்தின்பலம்வாய்ந்த 24 முன்னணிக்கழகங்களையிணைத்து, அணிக்கு 8 வீரர்கள், 5 பந்து வீச்சு ஓவர்கள் என்ற அமைப்பில் மென்பந்து சுற்றுப்போட்டியொன்றை எமாறெல்ட் விளையாட்டுக்கழகத்தினர் சனி, ஞாயிறு தினங்களில் நிந்தவூர் பொது மைதானத்தில் மிகவும் சிறப்பாகவும், கோலாகலமாகவும் நடத்தியிருந்தனர்.

இச்சுறுப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட் டுக்கழகமும், நிந்தவூர் ஹிக்மாஹ் விளையாட் டுக்கழகமும் தெரிவானது.

இவ்விறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற ஹிக்மாஹ் அணியினர், முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்து நிர்ணயிக்கப்பட்ட




5 ஓவர்களில் (20 பந்துகள்) 41 ஓட்டங்களை 3 விக்கட் இழப்பிற்கு பெற்றுக்கொண்டனர்.

பதிலுக்கு 42 என்ற வெற்றியிலக்கைக்கொண்டு துடுப்பெடுத்தாடிய பிளைங் ஹோர்ஸ் அணியினர், ஒரு விக்கட்டை மாத்திரமிழந்து 17 பந்துகளில் 43 என்று 3 பந்துகள் மீதமிருக்க 7 விக்கட்டுகளால் அபார வெற்றியீட்டி, கிண்ணத்தையும், 25 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் பெற்றுக்கொண்டனர்.

இவ்விறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராகவும் பிளைங் ஹோர்ஸின் ஆஷிம் (பொறியியலாளர்), சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸாஜித், தொடரில் தொடராக சிக்ஸர்களை விளாசிய வீரர் என றிபான் (உடற்கல்வி ஆசிரியர்) ஆகியோர் தெரிவாகி கிண்ணங்களையும், பணப்பரிசில்களையும் பெற்றுக்கொண்டனர்.

இத்தொடரின் இறுதிப்போட்டியில் மிகச்சிறப்பாக கடைசிவரைபோராடியஹிக்மாஹ்அணியினருக்கும், மூன்றாமிடத்தை தனதாக்கிக்கொண்ட நிந்தவூர் லகான் அணியினருக்கும்

இத்தொடரை மிகச்சிறப்பாகவும், கோலாக லமாகவும் நிறைவுசெய்த அனுசரணையாளர்கள் மற்றும் நிந்தவூர் எமாறெல்ட் நிருவாகத்தினருக்கும், அங்கத்தவர்களுக்கும், இத்தொடரின் வெற்றிக்கனியைச்சுவைக்களத்தில் அரும்பாடுபட்ட நிருவாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், அபிமானிகள், வெளிநாடுவாழ் சிரேஷ்ட வீரர்கள் மற்றும் ஏனையவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை கழக நிருவாகம் தெரிவித்துக்கொள்கிறது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கடவுச் சீட்டுக்களின் காலத்தை ஒரு வருடத்துக்கு நீடிக்க முடிவு

ஜூலை முதலாம் திகதியில் இருந்துகாலாவதியாகும்வெளிநாட்டு கடவுச்சீட்டுகளின் காலத்தை ஒரு வருடத்தால் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஈ பாஸ்போட்) இலத்திரனியல் கடவுச்சீட்டு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுகட்டுப்பாட்டாளர்நாயகம் ஹர்ஷஇலுக்பிடிய தெரிவித்துள்ளார்.

ஏதாவது வெளிநாட்டு பயணச் சீட்டு ஒன்று செல்லுபடியாகும் 10 வருட கால எல்லையை தாண்டிய பின்னர் அதற்கு மேலும் ஒரு வருட காலம் வழங்குவது இலத்திரனியல் கடவுச்சீட்டு விநியோகிக்கும்வரைமாத்திரமாகும் எனவும் கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இருந்து இலத்திரனியல் கடவுச்சீட்டு விநியோகம் ஆரம்பிக்கப்படுவதுடன் சாதாரண வெளிநாட்டு கடவுச்சீட்டு உடையவர்கள் விரைவாக இலத்திரனியல் கடவுச்சீட்டைபெற்றுக்கொள்ளுமாறு குடிவரவுகுடியகல்வுதிணைக்களம் கேட்டுக்கொள்கிறது.

இதேவேளை, தேசிய அடையாளஅட்டைபெற்றுக்கொள்ள முடியாமல் போன, 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காக தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கு மேலும் சந்தர்ப்பம் இருப்பதாக ஆட்பதிவு பதிவுதிணைக்களம்அறிவித்துள்ளது.

பிறப்பத்தாட்சிப்பத்திரம் ஒன்று இல்லாமை காரணமாக வேறு அடையாள அட்டை ஒன்றை பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பவர்களுக்காக இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

இந்த மாதம் 30ஆம் திகதிவரை இந்தசந்தர்ப்பம்இருப்பதாகஆட்பதிவு திணைக்களஆணையாளர்நாயகம் பிரதீப் சபுதன்திரி தெரிவித்துள்ளார். இதற்காக விண்ணப்பிப்பதற்கு கடந்த மார்ச் 31ஆம் திகதிவரை காலம் வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

என்றாரலும் விண்ணப்பிக்கும் காலத்தை நீடித்து வழங்குமாறு பிரதேச செயலாளர்களின் கோரிக்கையை கருத்திற்கொண்டு, இவ்வாறு விண்ணப்பிப்பதற்கான காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கென்யாவில் இலங்கையர் பாதுகாப்பாக உள்ளனர்

## இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் கணநாதன்

கென்யாவிலுள்ள அனைத்து இலங்கையர்களும் பாதுகாப்பாக உள்ளனர், நைரோபியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக கென்யாவிலுள்ள இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் கணநாதன் தெரிவித்துள்ளார்.

கென்யாவின் தலைநகர் நைரோபியில் உள்ள நாடாளுமன்றத்தில் சர்ச்சைக்குரிய நிதி சட்டமூலம் தாக்கல் செய்வதற்கு எதிராக கடந்த சில நாள்களாக கென்யாவின் பல பகுதிகளிலும் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், நாடாளுமன்றஉறுப்பினர்கள்இந்தசட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்குமாறு வலியுறுத்தி பொது மக்கள் நாடாளுமன்றத்திற்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஆயிரக்கணக் கானோர் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைந்தனர். அப்போது அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தினர். அதில் 5 பேர் உயிரிழந்துள்ளதோடு, 31 பேர் காயமடைந்துள்ளார்கள்.

இந்நிலையில், கென்யாவிலுள்ள இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் கணநாதன் -

இங்குள்ள அனைத்து இலங்கையர்களும் பாதுகாப்பாக உள்ளனர் என்பதையும், எந்த ஓர் ஆபத்தான சூழ்நிலையும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். நாங்கள்நிலைமையைஉன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம், தேவைக்கேற்ப தொடர்ந்து தகவல்களை வழங்குவோம். - எனத் தெரிவித்துள்ளார்.

# வத்தளையில் 5 மில்லியன் ரூபா ஹெரோயினுடன் மூவர் கைது

வத்தளை பிரதேசத்தில் 5 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்த26முதல்48வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினர் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் வத்தளை பிரதேசத்தில்கடந்த24ஆம்திகதி மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்ட ஓட்டோ ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, ஓட்டோவில் மிகவும்சூட்சுமமானமுறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த5 மில்லியன்ரூபாபெறுமதியான 200 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர்கள் மூவரும் ஓட்டோ கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காகபொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணியின் 2ஆவது மக்கள் பேரணி

## ஜூன் 29 வெல்லவாய நகரில்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணிக் கட்சி இணைந்து நடத்தும் பொதுக்கூட்டத் தொடரின் இரண்டாவது கூட்டம் எதிர்வரும் ஜூன் 29ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு மொனராகலை மாவட்டத்தின்வெல்லவாயநகரமையத்தில்நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'நாட்டிற்கு வெற்றி - ஒன்றிணைந்து பயணிப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் இந்த மக்கள் கூட்டம் இடம்பெறவுள்ளது.

வெளிநாட்டுவேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமாரவால் வெல்லவாய மக்கள் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, 'புதிய கூட்டணி கட்சி ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து புதிய கூட்டணியின் வேலைத்திட்டம் பலப்படுத்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவிலான எம்.பி.க்களின் பங்கேற்புடன் புதிய கூட்டணி தலைமையிலான ஏனைய கட்சிகள், பாரிய கூட்டணியொன்றை கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

பல்வேறு அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், பல்வேறு சிவில் அமைப்புக்கள் இப்புதிய கூட்டணியை நோக்கி அணி திரளத் தயாராகி வருகின்றனர்.' என்றார்.

இந்த மக்கள் பேரணி நிகழ்வில், நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன, துமிந்த திஸாநாயக்க, ஜகத் புஸ்பகுமார, சுசில் பிரேமஜயந்த, நளின் பெனாண்டோ, அநுர பிரியதர்ஷன யாபா, நிமல் லான்சா, பிரியங்கர ஜயரத்ன ஆகியோர் உள்ளிட்ட புதிய கூட்டணிக்கு ஆதரவு தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள்பாராளுமன்றஉறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்க உள்ளனர். (05)

# கோணேஸ்வரம் கோவிலருகில் கசிப்பு விற்பனை கிழக்கு ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை

திருக்கோணேஸ்வரம் கோவில் அருகில் கசிப்பு விற்பனை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன்அறிக்கையொன்றின்மூலம்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

திருக்கோணமலை திருக்கோணேஸ்வரம் அருகே சட்டவிரோதமாகஅமைக்கப்பட்டபெட்டிக்கடையொன்றில் கசிப்பு விற்கப்பட்டமை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவ்விடயம் சைவமக்களுக்கு அதிர்ச்சியையும் கவலையையும் தரும் செய்தியாகும்.

சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கடைகளை அகற்றுமாறு சைவ நிறுவனங்கள் தொடர்ந்து வேண்டுதல் விடுத்த போதும் இதுவரை எவரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

தங்களிடமும் இவ்விடம் தொடர்பாக முறையிட்ட போதும் இதுவரை பயன்கிட்டவில்லை.

புனிதமான வரலாற்றுத் தலமருகே இவ்வாறான சம்பவம் நடைபெறுவது அருவருக்கத்தக்க செயலாகும்.

தாங்கள் இதற்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த உடன் பெட்டிக்கடைகளை நீக்க நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். - என்றுள்ளது. (05)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.06.2024இல் வெளியிடப்பெற்றது